## 2013 ஆம் ஆண்டு பல்வகைக் குடிவரவு வீசா நிகழ்ச்சித் திட்டத்துக்கான அறிவுறுத்துரைகள் (DV - 2013)

காங்கிரசின் ஆணை பெற்ற பல்வகைக் குடிவரவு வீசா (DV) நிகழ்ச்சித் திட்டமானது அரச திணைக்களத்தினால் ஆண்டு அடிப்படையில் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இது குடிவரவு, நாட்டுரிமைச்சட்டத்தின் (INA) 203(C) ஆம் பிரிவின் நியதிகளின்படி நடாத்தப்படுகிறது. இச்சட்டம், காலங்காலமாக ஐக்கிய அமெரிக்காவுக்குக் குறைந்த வீதத்தில் ஆட்கள் குடிவரும் நாடுகளைச் சேர்ந்தவர்களுக்குக் கிடைக்கச் கூடியதாக “பல்வகைக் குடிவருநர்கள்” என அறியப்படும் ஒரு குடிவரவை ஏற்பாடு செய்கிறது. 2013 ஆம் ஆண்டுக்கான குடிவரவு வீசாக்கள் 50,000 ஆகும்.

ஒவ்வொரு ஆண்டும் நடாத்தப்படும் DV நிகழ்ச்சித் திட்டம் எளிய, ஆனால், கடுமையான தகுதித் தேவைப்பாடுகளை நிறைவு செய்யும் ஆட்களுக்கு வீசாக்களை வழங்குகிறது. கணினித் தொழிற்பாட்டு எழுந்தமான திருவுளச் சீட்டு இழுப்பு ஒன்று பல்வகை வீசாக்களுக்குத் தெரிவுப் பெறுநர்களைத் தெரிவு செய்கிறது. எனினும், வீசாக்கள் ஆறு பூகோளப் பிராந்தியங்களிடையே விநியோகிக்கப்படுகின்றன. பிராந்தியம் ஒவ்வொன்றினுள்ளும் ஏதாவது ஒரு வருடத்தில் கிடைக்கப் பெறும் பல்வகை வீசாக்களில் ஏழு சத வீதத்துக்கும் மேற்பட்ட வீசாக்களை எந்த ஒரு நாடும் பெறமாட்டாது. அதிக எண்ணிக்கையான வீசாக்கள், குடிவரவு வீதம் குறந்த பிராந்தியங்களுக்கு வழங்கப்படுகின்றன. மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் 50,000 குடிவரவாளர்களை அனுப்பிய நாடுகளின் மக்களுக்கு வீசா எதுவும் வழங்கப்படமாட்டாது.

DV-2013 ஆம் ஆண்டுக்குரிய பல்வகை வீசாக்களுக்கு பின்வரும் நாடுகளைச்[1] சேர்ந்தவர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதி அற்றவர்களாவர். இந்த நாடுகள் முன் சென்ற ஐந்து வருட காலப்பகுதியில் மொத்தத்தில் 50,000 ற்கும் மேற்பட்ட குடிவரவாளர்களை அனுப்பி வைத்தமையே அதற்கான காரணமாகும்.

***பங்களாதேஸ், பிரேசில், கனடா, சீனா (பெருநிலத்தில் பிறந்தவர்கள்), கொலம்பியா, டொமினிகன் ரிபப்ளிக், ஈக்வடோர், எல் சல்வடோர், கௌதமாலா, ஹெய்தி, இந்தியா, ஜமெய்க்கா, மெக்சிக்கோ, பாக்கிஸ்தான், பெரு, பிலிப்பைன்ஸ், போலந்து, தென் கொரியா, ஐக்கிய இராச்சியமும் (வட அயர்லாந்து நீங்கலாக) அதனைச் சார்ந்த ஆள்புலன்களும், வியட்னாம்.***

ஹொங்கொங் விசேட நிர்வாகப் பிராந்தியம் (SAR), மக்கவ் விசேட நிர்வாகப் பிராந்தியம் (SAR), தாய்வான், நாடுகளிற் பிறந்தவர்கள் தகுதியுடையவர்களாவர்.

DV-2013 க்கு தெற்கு சூடான், போலந்து நாடுகளைச் சேர்ந்த சுதேசிகள் தகுதி பெற்றுள்ளதுடன் பங்களாதேஸ் சுதேசிகள் தகுதியை இழந்துள்ளனர்.

பல்வகை வீசா செயன்முறையை வினைத்திறனுடையதாகவும் பாதுகாப்பானதாகவும் ஆக்குவதன் பொருட்டு அரசத் திணைக்களம் DV - 2005 இன் ஆரம்பம் முதல் மின்னணுப் பதிவு முறையைச் செயற்படுத்தியுள்ளது. சட்ட விரோதக் குடிவரவு நோக்கங்களுக்காக மோசடியில் ஈடுபடுபவர்களை யும் பல நுழைவுப் பதிவுகளைச் சமர்ப்பிப்பவர்களையும் இனங்காண்பதற்கு விசேட தொழினுட்பவியலையும் பிற மார்க்கங்களையும் பயன்படுத்துகின்றது.

---

1. இந்த அறிவித்தலில் “நாடு” எனும் பதத்திற்குறிய நாடுகள், பொருளாதாரங்கள், நியாயாதிக்கங்கள் இந்த அறிவுறுத்தல்களின் இறுதியில் தெளிவாக நிரல்படுத்தப்பட்டுள்ளன.

***<u>பல்வகை வீசா பதிவுக் காலப்பகுதி</u>***

***DV - 2013 பல்வகை வீசா அதிஷ்டச் சீட்டுக்கான பிரவேசப் பதிவுகள் மின்னணு முறையில் 2011 ஒக்டோபர் 4 செவ்வாய் கிழமை கீழைத்தேயப் பகல்நேரத் (EDT) (GMT-4)திற்கும் 2011 நவம்பர் 5, 2011 சனிக்கிழமை கீழைத்தேய பகல்நேரத்திற்கும் (EST) (GMT-5) இடையில் சமா்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரா் பதிவுக் காலப்பகுதியின் போது www.dvlottery.state.gov இல் மின்னணுப் பல்வகை வீசா பிரவேசப் படிவத்தை அனுகலாம். தாள் வழிப் பிரவேசப் பதிவு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பதாரா் பிரவேசப் பதிவுக்குப் பதிவுக் காலப்பகுதியின் கடைசி வாரம் வரையில் காத்திருக்கவேண்டாமென வலுவாக ஊக்குவிக்கப் படுகின்றனா். கேள்வி அதிகமாக இருப்பது, இணைய தளத்தாமதங்களை விளைவிக்கக் கூடும். 2011 நவம்பர் 5 (EST) மதியத்தின் பின்னா் பிரவேசப் பதிவு எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.***

## பிரவேசப் பதிவுக்கான தேவைப்பாடுகள்

- **பல்வகை வீசா அதிஷ்டச் சீட்டிழுப்பில் பிரவேசிப்பதற்கு நீங்கள், நிரற்படுத்தப்பட்டிருக்கும் நாடுகளில் ஒன்றில் பிறந்தவராக இருத்தல் வேண்டும்.** <u>*மக்கள் தகுதி பெறும் பிராந்தியவாரியான நாடுகளின் நிரலைப்பார்க்க.*</u>

**தகைமை பெறும் சுதேசிகளது நாட்டுக் குடிமகன்:** அநேக சந்தா்ப்பங்களில், இது நீங்கள் பிறந்த நாடு எனப் பொருள்படும். எனினும், நீங்கள் தகுதி பெறுவதற்கு வேறு இரண்டு வழிகளும் உள்ளன. முதலாவது, தகுதி பெற இயலாத ஒரு நாட்டில் நீங்கள் பிறந்திருந்தாலும், மக்கள் தகுதி பெறத்தக்க நாட்டில் உங்கள் வாழ்க்கைத் துணை பிறந்திருந்தால், உங்கள் வாழ்க்கை துணை பிறந்த நாட்டுக்கு நீங்கள் உரிமை கோர முடியும். ஆயின், நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையுமான இரண்டு பேரும் தெரிந்தெடுத்த பிரிவில் இருந்தால், இரண்டு பேருக்கும் வீசா வழங்கப்படும். இருவரும் சமகாலத்தில் ஐக்கிய அமெரிக்காவினுள் பிரவேசிக்க வேண்டும். இரண்டாவது, தகுதி பெற இயலாத மக்கள் வாழும் நாட்டில் நீங்கள் பிறந்திருந்தாலும், உங்கள் பெற்றோா் இருவரும் அந்நாட்டில் பிறக்காமல் இருப்பின் அல்லது நீங்கள் பிறந்த போது, அந்நாடு உங்கள் பெற்றோரது வதிவிடமாக இல்லாது இருப்பின், DV - 2013 நிகழ்ச்சித் திட்டத்துக்குத் தகைமை பெறும் மக்கள் வாழும் நாடாக உங்கள் பெற்றோரில் ஒருவா் பிறந்த நாடு இருக்குமிடத்து நீங்கள் நாட்டுரிமை கோர முடியும்.

- **அதிஷ்டச் சீட்டிழுப்பிற்கு நீங்கள் பிரவேசிப்பதற்கு, நீங்கள் DV நிகழ்ச்சித் திட்டத்தின் கல்வி அல்லது வேலை அனுபவத் தேவைப்பாட்டில் ஒன்றை நிறைவு செய்தல் வேண்டும்:** நீங்கள் உயா் பாடசாலைக் கல்வி அல்லது அதற்கு சமமான கல்வியை, அதாவது, 12 வருட ஆரம்ப, இடைநிலைக் கல்வி நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருக்க வேண்டும், ஜீ.சீ.ஈ சாதாரண தரத்தில் முதன்மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியுடன் பூர்த்தி செய்திருக்க வேண்டும் **அல்லது** ஆகக் குறைந்தது இரண்டு வருடப் பயிற்சி அல்லது அனுபவம் தேவைப்படும் தொழில் ஒன்றில் கடந்த ஐந்து வருடங்களில் இரண்டு வருட வேலை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். ஐக்கிய அமெரிக்கத் தொழில் திணைக்களத்தின் **O* Net** தொடா்புறா தரவுத்தளம், தகைமை பெறல் வேலை அனுபவம் பற்றி நிா்ணயிப்பதற்குப் பயன்படுத்தப்படும். தகைமை பெறுவதற்கான வேலை அனுபவம் பற்றி மேலும் தகவல்களைப் பெறுவதற்கு <u>*அடிக்கடி கேட்கப்படும் கேள்வி # 13 ஐப் பார்க்க.*</u>

மேற்கூறியத் தேவைகள் எதனையும் நீங்கள் கொண்டிருக்காவிட்டால் DV நிகழ்ச்சித் திட்டத்திற்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டாம்.

## DV-2012 இற்குப் பிரவேசப் பதிவைச் சமா்ப்பிப்பதற்கான நடைமுறைகள்

- **இராஜாங்கத் திணைக்களம், பதிவுக் காலப்பகுதியின் போது www.dvlottery.state.gov இல் மின்னணு முறையில் சமா்ப்பித்த, பூர்த்தி செய்த மின்னணுப் பல்வகை வீசா பதிவுப் படிவங்களை மட்டும் ஏற்றுக் கொள்ளும்.** கீழைத் தேசப் பகல் நேரம் (EDT) (GMT-4), 2011, ஒக்டோபா் 4, செவ்வாய்கிழமை மதியம் முதல், கீழைத் தேச பகல் நேரம் (EST) (GMT-5), 2011, நவம்பா் 5, சனிக்கிழமை மதியம் வரை, பதிவுக் காலமாகும்.
  - நபா் ஒருவருக்காக, ஒரு பதிவுக்கு மேற்பட்ட பதிவுகள் பெறப்பட்டால், அவற்றைச் சமா்ப்பித்தவா்கள் எவா்களாக இருப்பினும், அவை அனைத்தும் தகுதி நீக்கஞ்செய்யப்படும். நீங்கள் உங்களது சொந்தப் பதிவைத் தயாரித்துச் சமா்ப்பிக்கலாம் அல்லது உங்களுக்காக எவரேனும் ஒருவா் பதிவைச் சமா்ப்பிக்கலாம். DV நிகழ்ச்சித் திட்டத்திற்கு ***எந்தவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.***

- வெற்றிகரமாகப் பதிவு செய்யப்பட்ட பதிவு ஒன்று, உங்களின் பெயர், தனித்தன்மை கொண்ட உறுதிப்படுத்தல் எண் என்பவற்றைக் கொண்டதாய் உறுதிப்படுத்தற் திரையில் காட்சிப்படுத்தப்படும். நீங்கள் உங்களது வெப் தேடுவானின் அச்சிடற் தொழிற்பாட்டைப் பயன்படுத்தி, உங்களது பதிவேடுகள் பொருட்டு இந்த நிரையை அச்சிடலாம். 2012, மே 1 ஆந் திகதி தொடக்கம், www.dvlottery.state.gov வலை கடப்பிடத்திற்கு மீண்டும் உங்கள் தனித்தன்மைவாய்ந்த உறுதிப்படுத்தல் எண்ணையும் சுய விபரங்களையும் வழங்கி, உங்களுடைய பிரவேசப் பதிவின் நிலையைப் பார்க்கலாம். உங்களுடைய பிரவேச தகுதி இறுதி முடிவு பதிவு **DV – 2013** க்கான உங்கள் தனித்தன்மை வாய்ந்த தெரிவு தகவலாக, நீங்கள் எவ்வாறு உங்கள் பதிவேட்டை மேற்கொண்டு செயல் படுத்தி உங்கள் குடிவரவு வீசாவுக்கான நேர்காணலுக்கு தயார்படுத்தலாம் என்பதற்கான முக்கிய தகவலாக இருப்பதனால், உறுதிப்படுத்தல் எண்ணை கவனமாகப் பேணுதல் அவசியமாகும்.
- தாள் பிரவேசப் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

• **தேவைப்படுத்திய சகல ஒளிப்படங்களையும் சமர்ப்பித்தல் மிக முக்கியம்.** தேவைப்படுத்திய ஒளிப்படங்கள் அனைத்தையும் சமர்ப்பிக்கவில்லையாயின் உங்கள் பிரவேசப் பதிவுகள் தகைமை நீக்கஞ்செய்யப்படும். பின்வரும் ஆட்களின், அண்மையில் எடுத்த ஒளிப்படங்கள் மின்னணுப் பல்வகை வீசா பிரவேசப் பதிவுப் படிவத்துடன் மின்னணுமுறையில் சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

- உங்களது ஒளிப்படம்.
- உங்களது வாழ்க்கைத் துணையின் ஒளிப்படம்
- இயற்கையாகப் பிறந்த பிள்ளைகள், சட்ட முறையில் தத்தெடுத்த பிள்ளைகள், மாற்றாந்தாய்/தந்தை பிள்ளைகள், உங்களுடன் வசிக்காது இருந்தாலும் சரி, DV நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உங்களுடன் குடி வருவதற்கு நீங்கள் உத்தேசிக்காத பிள்ளையாயினும் சரி, அடங்கலாக 21 வயதுக்குக் குறைந்த விவாகமாகாத ஒவ்வொரு பிள்ளையினதும் ஒளிப்படம்.

***உங்கள் வாழ்க்கைத் துணையினதும் ஒவ்வொரு பிள்ளையினதும் ஒளிப்படத்தைச் சமர்ப்பிக்கத் தவறுவது, மின்-DV முறைமைக்கான பூர்த்தியுறாப் பிரவேசப் பதிவாக அமையும். இப்பதிவு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அதனை மீளச் சமர்ப்பிக்க வேண்டி நேரும்.***

• உங்கள் விண்ணபத்தில், உங்கள் வாழ்க்கைத் துணையின் (கணவர் அல்லது மனைவி) திருமணமாகாத 21 வயதிற்குறட்பட்ட பிள்ளைகளின் விபரங்கள் அவர்கள் உங்களுடன் வாழ்ந்தாலும் இல்லாவிட்டாலும் சமர்ப்பிக்க வேண்டும். ஐக்கிய அமெரிக்காவில் ஏற்கெனவே பிரசையாக இருக்கும் அல்லது சட்டமுறையில் நிரந்தரமாக வசிக்கும் பிள்ளைகளின் விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. ஆயினும், உங்கள் குடும்ப அங்கத்தவர் அனைவரது பெயர்களையும் அவர்களது ஒளிப்படங்களையும் DV வீசாவுக்கு விண்ணப்பிக்கும் பொழுது சமர்ப்பிக்க வேண்டும். குழும அல்லது குடும்ப ஒளிப்படங்கள் ஏற்கப்படமாட்டா. ஒவ்வொரு குடும்ப அங்கத்தவருக்கும் தனித்தனி ஒளிப்படம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். **மின்-DV முறைமையுள் ஒவ்வொரு தனியாளினதும் சரியான ஒளிப்படத்தைப் பதியத் தவறுவது பிரதான விண்ணப்பதாரரைத் தகைமை நீக்கும் விளைவுக்கு உட்படுத்துவதுடன் வீசா நேர்காணலின் போது சகல வீசாக்களும் மறுக்கப்படும் நிலையையும் ஏற்படுத்தும்.**

• ஒளிப்படங்கள் அண்மையில் எடுக்கப்படாதவையாக இருந்தால், அல்லது சூழ்ச்சித் திறனுடன் கையாளப்பட்டிருந்தால், அல்லது கீழே விளக்கப்பட்டிருக்கும் விவரக் குறிப்புக்களுக்கு அமையத் தவறியிருந்தால், பதிவுகள் தகைமை நீக்கஞ்செய்யப்படுவதற்கு அல்லது வீசாக்கள் மறுக்கப்படுவதற்கு ஏதுவாகும்.

**இலக்க ஒளிப்படத்தை (படிமம்) சமர்ப்பிப்பதற்கான அறிவுறுத்துரைகள்.**

உங்களதும் உங்கள் வாழ்க்கைத் துணையினதும் ஒவ்வொரு பிள்ளையினதும் இலக்க ஒளிப்படம் (படிமம்) மின் - DV பதிவுப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். படிவக் கோப்பினை ஒன்றில் புதிய இலக்க ஒளிப்படம் ஒன்றை எடுப்பதன் மூலம் அல்லது இலக்க வருடி ஒன்றுடன் ஒளிப்பட அச்சிடு வருடல் மூலம் ஆக்க முடியும். படிவக் கோப்பானது பின்வரும் அமைப்புமுறை விவரக் குறிப்புக்களையும் தொழினுட்பமுறை விவரக் குறிப்புக்களையும் இறுக்கமாகக் கடைப்பிடித்ததாகவும் பின்வரும் வழிகளில் ஒன்றில் ஆக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்: புதிய இலக்கப் படிமம் ஒன்றை எடுத்தல் அல்லது, சமர்பித்த ஒளிப்படத்தை வருடுவதற்கு இலக்க வருடி ஒன்றைப் பயன்படுத்துதல். விண்ணப்பதாரர்கள், தமது பிரவேசப்

பதிவுகளைச் சமா்ப்பிப்பதற்கு முன்னா், தமது ஒளிப்படத்தின் பொருத்தப்பாட்டை, மின்னணு-DV வலைகடப்பிடத்தில், ஒளிப்படச் செல்லுபடியாக்கல் மையினூடாகச் சோதிக்கலாம்.
ஒளிப்பட அமைப்புப் பற்றிய, மேலதிகத் தொழினுட்ப மதியுரையை, ஒளிப்படச் செல்லபடியாக்கி வழங்கும். அத்துடன், ஏற்றுக்கொள்ளக்கூடிய, ஏற்றுக் கொள்ள முடியாத ஒளிப்படங்களுக்கான உதாரணங்களையும் அது காட்டும்.

***அமைப்பு முறை விவரக் குறிப்புக்கள்***: சமா்ப்பிக்கப்பட்ட இலக்கப் படிமம் பின்வரும் அமைப்புமுறை விவரக் குறிப்புக்களுக்கு அமைந்ததாக இருத்தல் வேண்டும். அன்றேல் பதிவு, தகைமை நீக்கத்துக்கு உட்படும்.

**தலையின் நிலை**

○ ஒளிப்படம் எடுக்கப்படும் ஆள் ஒளிப்படக் கருவியை நேராகப் பார்த்தல் வேண்டும்.

○ ஆளின் தலை மேலோ, கீழோ, பக்கவாட்டாகவோ சரிந்திருத்தலாகாது.

○ ஆளின் தலை அல்லது முகப்பரப்பு ஒளிப்படப் பரப்பின் கிட்டத்தட்ட 50 சதவீதத்தையும் 69 சதவீதத்தையும் மேவுதல் வேண்டும். கண்ணின் உயரம் (உருவத்தின் கழே இருந்து கண்ணின் மட்டத்திற்கு) ஒளிப்பட உயரத்தின் 56 சதவீதத்தில் இருந்து 69 சதவீதம் வரை இருக்க வேண்டும்.

**ஒளிப்பட படிமத்தின் தலை அளவு வரைபடம்.**




**ஒளிப்பட படிம உதாரணங்களை வெப்பேஜில் பார்க்கவும்.**

- **பின்னணி**

○ ஒளிப்படம் எடுக்கப்படும் ஆள் நடுநிலையான, மெல்லிய நிறமுள்ள பின்னணியின் முன் நிற்றல் வேண்டும்.

○ இருள் படா்ந்த அல்லது உருவரைப் படங்கள் அமைந்த பின்னணிகள் ஏற்கத்தக்கவை அல்ல.

- **குவி மையம்**

○ ஒளிப்படம் குவி மையப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

- **அலங்காரப் பொருள்கள்**

○ ஒளிப்படம் எடுக்கப்படும் ஆளின் ஒளிப்படமானது, முகத் தோற்றக் குறைவுபடுத்துகின்ற சூரியக் கண்ணாடிகளையோ வேறு பொருட்களையோ அணிந்ததாக இருந்தால் அது ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

- **தலைப் போா்வைகள், தொப்பிகள்**

○ தலைப் போா்வைகள் அல்லது தொப்பிகள் அணிந்த தனிமனிதா் ஒளிப்படங்கள், அவரது மத நம்பிக்கை தொடா்புற்றதாக இருக்குமிடத்து மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்; அதுவும் கூட விண்ணப்பதாரரின் முகத்தின் ஏதாவது பகுதியை மறைப்பதாக இருக்கக் கூடாது. குறிப்பாக மதச் சாா்பு கொண்டிராத குல அல்லது பிற குல்லாய் அல்லது தலையணிகளுடன் கூடிய தனிமனிதா் ஒளிப்படங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. தொப்பிகள் அணியும் இராணுவ

அல்லது விமானச் சேவை அல்லது பிற ஆளணியினரின் ஒளிப்படங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

**24–பிட் வண்ண ஆழம் கொண்ட வண்ண ஒளிப்படங்கள் அவசியம்.** ஒளிப்படங்கள் கணினியில் உள்ள கோப்பினுள் கமராவிலிருந்து இறக்கப்படலாம் அல்லது கணினியில் உள்ள கோப்பினுள் வருடப்படலாம். நீங்கள் வருடி ஒன்றைப் பயன்படுத்தினால், அமைப்புக்கள் மெய்நிலை வண்ணத்துக்கானதாக அல்லது 24-பிட் வண்ணப் பாங்குக்கானதாக இருத்தல் வேண்டும்.
கீழே தரப்பட்டிருக்கும் மேலதிக வருடல் தேவைப்பாடுகளைப் பார்க்க.

***தொழினுட்ப விவரக் குறிப்புக்கள்***

சமர்ப்பிக்கப்பட்ட இலக்க ஒளிப்படம் கீழே தரப்பட்டிருக்கும் விவரக் குறிப்புக்களுக்கு அமைவுற்றதாக இருத்தல் வேண்டும். அன்றேல் அம்முறைமை மின்-DV பிரவேசப் பதிவு, படிவத்தை, சுயமே இரத்துச்செய்து அதனை அனுப்பியவருக்கு அறிவித்து விடும்.

- **புதிய இலக்கப் படிமம் ஒன்றை எடுத்தல்:** புதிய இலக்கப் படிமம் ஒன்று எடுக்கப்பட்டால் அது பின்வரும் விவரக் குறிப்புக்களை நிறைவு செய்வதாக இருத்தல் வேண்டும்.

படிமக் கோப்பு உருவமைப்பு: படிமம் கூட்டு ஒளிப்பட நிபுணர் குழும (JPEG) உருவமைவில் இருத்தல் வேண்டும்.

படிமக் கோப்பு அளவு: ஆகக் கூடிய படிமக் கோப்பு அளவு, 240 கிலோ பைட்டுக்களாக இருத்தல் வேண்டும் (240 KB).

படிமப் பிரிதிறனும் பரிமாணமும்: 600 படமூலங்கள் உயரமும் 600 படமூலங்கள் அகலமும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

படிம வண்ண ஆழம்: 24 – பிட் வண்ணம் (குறிப்பு: வண்ண ஒளிப்படங்கள் அவசியம். ஆனால், கறுப்பு, வெள்ளை, ஒரு வண்ணப் படிமங்கள் (2 – பிட் வண்ண ஆழம்), 8 – பிட் வண்ணம், 8 – பிட் சாம்பல் அளவிடை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.)

- **சமர்ப்பித்த ஒளிப்படத்தை வருடுதல்**: ஒளிப்பட அச்சுப் பதிவு ஒன்று வருடப்படுவதற்கு முன்னர், அது மேலே பட்டியற்படுத்தப்பட்ட விவரக் குறிப்புக்களை நிறைவு செய்தல் வேண்டும். ஒளிப்பட அச்சுப்பதிவு அமைப்பு அச்சு வண்ணத்தையும் விவரக் குறிப்புக்களையும் நிறைவு செய்தால், பின்வரும் வருடி விவரக் குறிப்புக்களைப் பயன்படுத்தி அச்சுப் பதிவை வருடவும்:

வருடிப் பிரிதிறன்: அங்குலம் ஒன்றுக்கு, குறைந்தது 300 புள்ளிகள் (dpi) பிரிதிறனில் வருடப்பெற்றிருத்தல்.

படிமக்கோப்பு உருவமைப்பு: படிமம், கூட்டு ஒளிப்பட நிபுணர் குழும (JPEG) உருவமைவில் இருத்தல் வேண்டும்.

படிமக்கோப்பு அளவு: ஆகக்கூடிய படிமக் கோப்பு அளவு 240 கிலோ பைட்டு. (240 KB).

படிம பிரிதிறன்: 600 x 600 பிக்செல் (பட மூலங்கள்)

படிம வண்ண ஆழம்: 24 – பிட் வண்ணம் (குறிப்பு: கறுப்பு, வெள்ளை, ஒரு வண்ண அல்லது சாம்பல் அளவிடைப் படிமங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

## மின்னணு பிரவேசத்துக்கு தேவையான தகவல்கள்

DV – 2013 அதிஷ்டச் சீட்டிழுப்புக்குப் பிரவேசிப்பதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. நீங்கள் DS 5501 மின்னணுப் பல்வகை வீசா பிரவேசப் படிவம் (மின்-D.V. பிரவேசப் படிவம்) ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அதை **www.dvlottery.state.gov** இல் மட்டும்தான் அணுக முடியும். படிவத்தை முழுமையாகப் பூர்த்தி செய்யத் தவறுவது பிரவேசத்துக்கான தமைமையை நீக்கி விடும். மின்-**DV** பிரவேசப் படிவத்தைச் சமர்ப்பிப்பவர்கள், மின்-**DV** பிரவேசப் படிவத்தில் பின்வரும் தகவல்களைச் சேர்க்குமாறு கேட்கப்படுகின்றனர்.

**குறிப்பு: இராஜாங்க திணைக்களம் விண்ணப்பதாரர் "வீசா ஆலோசகர்," "வீசா ஏஜண்ட்" போன்றவர்களினதோ அல்லது வேறு தனிப்பட்டவர்களினதோ உதவியின்றி தானாகவே விண்ணப்பத்தை அனுப்புமாறு பலமாகக் ஆலோசனைக் கூறுகின்றது. இவ்வாறு விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய தனிப்பட்டவர்களின் உதவியை பெற நேர்ந்தால், அதனை தயார் செய்யும் பொழுது கூடவே இருப்பதுடன், உங்கள் தனித்தன்மைவாய்ந்த உறுதிப்படுத்தல் எண்ணையும் சுய விபரங்களையும் பாதுகாத்தல் வேண்டும். உதவி செய்பவர்கள் உறுதிப்படுத்தல் எண்ணை கொடுக்காமல் வைத்துக்கொண்டு, சட்ட ரீதியாக உங்களுக்கு நேரடியாகக் கிடைக்கும் தகவல்களை உங்களுக்கு கொடுப்பதற்கு மாற்றீடாக பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளுமாறு உங்களை வற்புறுத்துவார்கள்.**

உங்கள் உறுதிப்படுத்தும் எண்ணைக் கொண்டே DV – 2013 க்கான உங்கள் பிரவேசத் தகுதி இறுதி முடிவை, மே மாதம் முதலாம் திகதி 2012 இல் இருந்து E-DV இணையதளத்தில் கண்டறிய முடியும். உங்களுடைய பிரவேச தகுதி இறுதி முடிவு பதிவு DV – 2013 க்கான உங்கள் தனித்தன்மை வாய்ந்த தெரிவு தகவலாக, நீங்கள் எவ்வாறு உங்கள் பதிவேட்டை மேற்கொண்டு செயல் படுத்தி உங்கள் குடிவரவு வீசாவுக்கான நேர்காணலுக்கு தயார்படுத்தலாம் என்பதற்கான முக்கிய தகவலாக இருப்பதனால், உறுதிப்படுத்தல் எண்ணை கவனமாகப் பேணுதல் அவசியமாகும். உங்கள் உறுதிப்படுத்தும் தகவலை நீங்கள் தவற விட்டால் உங்களால் உங்கள் DV உட்பிரவேசத் தகவலை அறிந்துக் கொள்ள முடியாமல் போவதுடன், எம்மாலும் உறுதிப்படுத்தும் எண் தகவலை மீளவும் அனுப்பி வைக்க முடியாது.

1. **முழுப்பெயர்** - கடைசி/குடும்பப் பெயர், முதல் பெயர், நடுப்பெயர். உங்கள் கடவுச் சீட்டில் இருப்பதைப் போன்றே உங்கள் பெயர் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

2. **பிறந்த திகதி** - நாள் - மாதம் - ஆண்டு.

3. **பால்** - ஆண் அல்லது பெண்.

4. **நீங்கள் பிறந்த நகரம்**

5. **நீங்கள் பிறந்த நாடு** - நாட்டின் பெயர், நீங்கள் பிறந்த நாட்டுக்குத் தற்போது வழங்கப்படும் பெயராக இருத்தல் வேண்டும்.

6. **DV நிகழ்ச்சித் திட்டத்துக்குத் தகுதி பெறும் அல்லது ஏற்புப் பெறும் நாடு -** உங்களுக்குத் தகுதி தரும் நாடு வழக்கமாக நீங்கள் பிறந்த நாடாகும். உங்களுக்குத் தகுதி தரும் நாடு, நீங்கள் வசிக்கும் நாட்டுடன் தொடர்புற்று இருக்க **வேண்டியதில்லை**. DV நிகழ்ச்சித் திட்டத்துக்குத் தகுதி பெறாத நாட்டில் நீங்கள் பிறந்திருந்தால், உங்களது தகுதியை ஏற்புச் செய்யத் தகுந்த நாடு ஒன்று, உங்களது இன்னொரு தெரிவாக உள்ளதா என்பதைக் கண்டறிவதற்கு அறிவுறுத்துரைகளை மீளாய்வு செய்யுங்கள். ஏற்புச் செய்வதற்கான தன்மை பற்றிய மேலதிக விபரங்களுக்கு இவ்வறிவுறுத்துரைகளின் "அடிக்கடி கேட்கும் கேள்வி #1" ஐ மீளாய்வு செய்க.

7. **பிரவேச ஒளிப்படம் (ஒளிப்படங்கள்)** - ஒளிப்பட விபரக் குறிப்புக்கள் பற்றிய தொழினுட்பத் தகவல்களைப் பார்க்கவும். உங்கள் வாழ்க்கைத் துணைவினதும் பிள்ளைகள் அனைவரதும் ஒளிப்படங்களை, ஏற்புடையனவாயின், அடக்குவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அடிக்கடி கேட்கும் கேள்வி #3 ஐப் பார்க்க.

8. **தபால் முகவரி –** மேற்பார்த்து, முகவரி வரிசை 1, முகவரி வரிசை 2, நகரம், பட்டணம், மாவட்டம்/நாடு/ மாகாணம்/அரசு, அஞ்சல் குறியீடு, நாடு.

9. **நீங்கள் இப்போது வசிக்கும் நாடு.**

10. **தொலைபேசி இலக்கம் (விருப்பத்துக்குரியது)**

11. **மின் - அஞ்சல் முகவரி – உங்களுக்கு நேரடியாகக் கிடைக்கும் விலாசத்தை கொடுக்கவும். நீங்கள் தெரிவான பட்சத்தில் இவ்விலாசத்திற்கு தகவல் கொடுக்கப்படமாட்டாது. எனினும், நீங்கள் தெரிவான பட்சத்தில், இவ்விலாசத்திற்கு கென்டகி கொன்சூல மத்தியத்தில் (Kentucky Consular Center) இருந்து, உங்கள் குடிவரவு வீசா நேர்காணலுக்கான விபரங்களை பிரவேசத்தகுதி இறுதிமுடிவு பதிவில் கிடைக்கக் கூடியதாக இருக்கும் என மின்-அஞ்சல் அனுப்பப்படும்.**

**12. இன்று வரையில் நீங்கள் பெற்ற அதியுயர் கல்வி மட்டம் எது?** உமது சொந்த கல்விச் சாதனையின் அதியுயர் மட்டத்தைப் பின்வருவனவற்றில் எது முன்வைக்கிறது என்பதைக் குறிப்பிடுக: (1) ஆரம்பப் பாடசாலை மட்டும் (2) உயர் பாடசாலை – பட்டம் இல்லை (3) உயர் பாடசாலைப் பட்டம் (4) தொழிற்கல்விப் பாடசாலை (5) சில பல்கலைக்கழகக் கல்வி நெறிகள் (6) பல்கலைக்கழகப் பட்டம் (7) சில பட்டதாரி மட்டக் கல்வி நெறிகள் (8) முதுமானிப் பட்டம் (9) கலாநிதி மட்டக் கல்வி நெறிகள் (10) கலாநிதிப் பட்டம்.

**13. விவாக நிலை –** விவாகமாகாதவரா? விவாகமானவரா? விவாகரத்துப் பெற்றவரா? தாரமிழந்தவரா? சட்ட ரீதியாகப் பிரிந்து வாழ்பவரா?

**14. பிள்ளைகளின் எண்ணிக்கை –** பிரவேசப் பதிவுத் தினத்தில் உங்கள் வாழ்க்கைத் துணையினதும் 21 வயதுக்குக் குறைந்த, விவாகமாகாத இயற்கையான பிள்ளைகளதும், சட்ட முறையில் தத்தெடுத்த பிள்ளைகளதும் மாற்றாந்தந்தை/தாய் பிள்ளைகளதும் பெயர், பிறந்த திகதி, பிறந்த இடம் என்பவற்றைப் பிரவேசப் பதிவுகளில் சேர்த்துக் கொள்ள வேண்டும். நீங்கள் மாற்றாம் பிள்ளையின் பெற்றாரைச் சட்டமுறையில் விவாகஞ் செய்யாதிருப்பினும் சரி, உங்கள் வாழ்க்கைத் துணை அல்லது பிள்ளை உங்களுடன் வாழாதிருந்தாலும் சரி, அத்துடன், அல்லது உங்களுடன் குடிவராதிருந்தாலும் சரி அவர்களது பெயர், பிறந்த திகதி, பிறந்த இடம் ஆகியவற்றை பிரவேசப் பதிவுகளில் அடக்குதல் வேண்டும். விவாகம் செய்த பிள்ளைகளும் 21 வயதுள்ள அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ள பிள்ளைகளும் பல்வகை வீசாவுக்குத் தகுதி உடையவர்கள் அல்லர் என்பதைக் கவனத்திற் கொள்ளவும். எனினும், சில சூழ்நிலைகளில் பிள்ளைகள் 'வயதாதலி'லிருந்து, ஐக்கிய அமெரிக்கச் சட்டம் பிள்ளைகளைப் பாதுகாக்கின்றது. உங்கள் விவாகமாகாத பிள்ளை 21 வயதை எட்டுவதற்கு முன், மின் DV பதிவை நீங்கள் செய்தால், விசா வழங்குவதற்கு முன், பிள்ளை 21 வயதை எய்தினால், வீசா செயன்முறைத் தேவைகளுக்காக, பிள்ளை, 21 வயதிற்கு உட்பட்டுள்ளது என்பது போலவே கருதப்படும். ஐக்கிய அமெரிக்காவில் ஏற்கெனவே பிரஜாவுரிமை பெற்ற அல்லது சட்டமுறையில் நிரந்தர வதிவாளர்களாக உள்ள உங்களின் பிள்ளைகளை நிரல்படுத்தத் தேவையில்லை. **தகுதியுள்ள பிள்ளைகள் அனைவரையும் நிரல்படுத்தத் தவறுவது, பிரதான விண்ணப்பதாரர் தகமை நீக்கம் பெறும் விளைவை ஏற்படுத்தும் என்பதுடன் வீசா நேர்காணலின் போது எல்லா வீசாக்களையும் மறுக்கும் விளைவையும் ஏற்படுத்தும்.** அடிக்கடி கேட்கப்படும் கேள்வி #11 ஐப் பார்க்க.

**15. வாழ்க்கைத் துணை பற்றிய தகவல்கள்** - பெயர், பிறந்த திகதி, பால், பிறந்த நகரம்/பட்டணம், பிறந்த நாடு, ஒளிப்படம். **உங்கள் வாழ்க்கைத் துணையை நிரல்படுத்தத் தவறுவது பிரதான விண்ணப்பதாரர் தகைமை நீக்கம் பெறும் விளைவை ஏற்படுத்தும் என்பதுடன் வீசா நேர்காணலின் போது எல்லா வீசாக்களையும் மறுக்கும் விளைவையும் ஏற்படுத்தும்.** வீசா விண்ணப்பம் செய்வதற்கு முன்னரே உங்கள் வாழ்க்கைத் துணையை விவாகரத்து செய்யும் திட்டம் இருந்திருப்பினும், அவரது விபரம் நிரல் படுத்தப்பட்டிருக்க வேண்டும்

**16. பிள்ளைகள் பற்றிய தகவல்கள்** - பெயர், பிறந்த திகதி, பால், நகரம்/பட்டணம், பிறந்த நாடு, நிழற்படம். மேலே கேள்வி #14 இல் பிரகடனப்படுத்திய பிள்ளைகள் அனைவரும் அடக்கப்படுதல் வேண்டும்.

## விண்ணப்பதாரரைத் தெரிவு செய்தல்

**கணினி, ஒவ்வொரு பிரதேசத்திலிருந்தும் நாட்டிலிருந்தும் பெறப்பட்ட தகைமை பெற்ற பிரவேசப் பதிவுகளிலிருந்து எழுந்தானமாக தனி நபர்களைத் தெரிந்தெடுக்கும்.** அனைத்து பல்வகை குடிவரவு வீசா விண்ணப்பதாரர்களுக்கும் (DV – 2013) மின் - DV இணையதளத்தின் பிரவேசத்தகுதி இறுதிமுடிவு பதிவிலிருந்து, அவர்கள் எழுந்தானமாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்களா இல்லையா என்னும் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். தெரிவுபெறுநர்களுக்கு 2012 மே 1 ஆம் திகதியிலிருந்து மின் - DV இணையத்தளம் www.dvlottery.state.gov இன் பிரவேசத்தகுதி இறுதிமுடிவு பதிவிலிருந்து அவர்களது தெரிவு விபரங்கள் அறிவிக்கப்படும். **தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அவர்களுடைய உறுதிப்பத்திர தகவற் தாள் மூலமாக மேற்கொண்டு ஐக்கிய அமெரிக்காவிற்கு குடியேறும் கட்டணத் தகவல்கள் அடங்கலாக மேலும் அறிவுறுத்துரைகள் வழங்கப்படும். பிரவேசத் தகுதி இறுதி முடிவு பதிவு, DV-2013 திட்டத்தில் தெரிவானவர்களை தெரிவிப்பதேயாகும். தகவற் திணைக்களம் தெரிவானவர்களுக்கு அஞ்சல் மூலம் தகவல் தெரியப்படுத்தப் போவதில்லை. எழுந்தமானதாக தெரிவு செய்யப்பட்டவர்கள் மின் அஞ்சல் மூலமும் தெரிவிக்கப் போவதில்லை. தெரிவு செய்யப்படாதவர்களுக்கும் அவர்கள் தெரிவாகாத விபரத்தை இணையதளத்தின் பிரவேசத்தகுதி இறுதிமுடிவு பதிவில் தெரிவிக்கப்படும். ஐக்கிய அமெரிக்கத் தூதரகங்களும் காவற் தூதரகங்களும் வெற்றிபெற்ற பதிவாளர் நிரலை வழங்கமாட்டா.** தெரிவு செய்யப்பட்டவர்களின் வாழ்க்கைத் துணைவர்களும் 21 வயதுக்குக் குறைந்த விவாகமாகாத பிள்ளைகளும் பிரதான விண்ணப்பதாரருடன் செல்வதற்கு, அல்லது, அவர் போய் சேர்ந்த பின்னர் செல்வதற்கு வீசாக்களுக்கு விண்ணப்பிக்க முடியும். DV – 2013 வீசாக்கள் 2012 ஒக்டோபர் 1 இற்கும் 2013 செப்டெம்பர் 30 இற்கும் இடையில் வழங்கப்படும்.

பிரவேசப் பதிவுகளைச் சீரிடுவதும் வெற்றி பெற்ற நபர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் வீசா வழங்குவதும் 2013 செப்டெம்பர் 30 நள்ளிரவு வாக்கில் முடிவடைதல் வேண்டும். இந்தத் திகதிக்குப் பின்னர் எந்தச் சூழ்நிலையிலாவது பல்வகை வீசாக்கள் வழங்கப்படமாட்டா. அத்துடன், அத்திகதிக்குப் பின்னர் சீராக்கங்கள் எவையும் அங்கீகரிக்கப்படமாட்டா. மேலும் இந்தத் திகதிக்குப் பின்னர் ஐக்கிய அமெரிக்காவில், வெற்றி பெற்ற பிரதான விண்ணப்பதாரருடன் இணைவதற்கு அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் பல்வகை வீசாக்களைப் பெற்றுக்கொள்ள மாட்டார்கள்.

எழுந்தமான சீட்டிழுப்பில் தெரிவுசெய்யப்பட்டவர்கள், ஐக்கிய அமெரிக்காவிற்குக் குடிவருவதற்குப் பல்வகை வீசாவைப் பெறுவதற்கு, ஐக்கிய அமெரிக்கச்சட்டத்தின் கீழ், தகைமைத் தேவைப்பாடுகள் **அனைத்தையும்** பூர்த்தி செய்ய வேண்டும். இத்தேவைப்பாடுகள், அவசியப்படும் பாதுகாப்பு மட்டத்தையும், பயங்கரவாதத்திற்கு அரச அனுசரணை வழங்கப்படுகின்றதென இனங்காணப்பட்ட நாடுகள் உட்பட – ஆனால் அவற்றிக்கு மட்டும் வரையறுக்கப்படாத - இவ்வறிவித்தலில் பட்டியற்படுத்தப்பட்டுள்ள சில நாடுகளின் சுதேசிகளைச் சீரிடுவதற்கு அவசியமான நேரத்தையும், குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்கக்கூடும்.

## முக்கிய அறிவித்தல்

**ஆண்டுதோறும் நடாத்தப்படும் மின்னணு அதிஷ்டச் சீட்டுப் பிரவேசப் பதிவுக்குக் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.** ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் DV நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு வெளி உசாவலர்களையோ தனியார் சேவைகளையோ பயன்படுத்துவதில்லை. DV பிரவேசப் பதிவுகளைத் தயாரிப்பதற்கு உதவி வழங்கும் இடைநிலையாளர்கள் அல்லது ஏனையோர் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் அதிகாரமோ சம்மதமோ இல்லாமல் அவ்வாறு செய்பவர்களாவர். DV பிரவேசப் பதிவுகளைத் தயாரிப்பதற்கு வெளி இடைநிலையாளர்களின் உதவியைப் பயன்படுத்துபவர்கள் முற்று முழுதாகத் தமது சொந்தத் தற்றுணியின் பேரில் அவ்வாறு செய்பவர்களாவர். பல்வகைக் குடிவரவு வீசா நிகழ்ச்சித் திட்டத்துக்கு இணையதளம் www.dvlottery.state.gov இல் மட்டுமே உத்தியோகப்பூர்வமாக மக்கள் பதிவு செய்துக் கொள்ள முடியும்.

விண்ணப்பதாரர் ஒருவரால் மின்னணு முறையில் நேரடியாகச் சமர்ப்பிக்கப்படும் தகைமை பெற்ற பிரவேசப் பதிவு ஒன்று, அதிஷ்டச் சீட்டிழுப்புப் பதிவுக் காலத்தில் பெறப்பட்ட மின்னணுப் பிரவேசப் பதிவொன்றைப் போலவே, அப்பிராந்தியத்தினுள், எழுந்தமான தெரிவில், கணினியினால் தெரிவு செய்யப்படுவதற்குச் சமமான சந்தர்ப்பத்தைப் பெறும். எனினும், ஓர் ஆள், ஒன்றுக்கு மேற்பட்ட பிரவேசப் பதிவை அனுப்பினால், அவரது பதிவு எந்த மூலத்திலிருந்து பெறப்பட்டதாயினுஞ் சரி, பதிவுத் தகைமையை இழப்பதற்கு ஏதுவாய் அமைந்து விடும்.

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**1. ‘தகுதியுடைமை’, ‘சுதேசி’, ‘ஏற்புப் பெறுகை’ எனும் பதங்களின் பொருள் என்ன? தகைமை பெறும் நாட்டில் பிறக்காத ஆட்கள் விண்ணப்பிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் எவையும் உண்டா?**

உங்கள் தகுதியுடை நாடு, வழக்கமாக நீங்கள் பிறந்த அதே நாடாகவே இருக்கும். உங்கள் தகுதியுடை நாடு, நீங்கள் வாழும் நாட்டுடன் தொடர்புற்றதல்ல. ‘சுதேசி’ என்பது, சாதாரணமாக, ஒருவர் தற்போது வாழும் இடம் அல்லது அவரது தேசியம் எதுவாக இருப்பினும் சரி, குறித்தவொரு நாட்டிற் பிறந்த ஒருவர் எனப் பொருள்படும். குடிவரவு நோக்கங்களுக்கு ‘சுதேசி’ என்பது, குடிவரவு, நாட்டுரிமைச் சட்டத்தின் பிரிவு 202 (b) இன் ஏற்பாடுகளின் கீழ் ஒருவர் பிறந்த நாடு தவிர்ந்த ஒரு நாட்டில் ‘ஏற்புப்பெறுவதற்கு’ உரித்துள்ள எவரேனும் ஒருவர் எனப்பொருள்படும்.

உதாரணமாக, இந்த வருட DV நிகழ்ச்சித் திட்டத்துக்குத் தகுதியில்லாத ஒரு நாட்டில் நீங்கள் பிறந்திருந்தால், நீங்கள், உங்கள் வாழ்க்கைத் துணை பிறந்த நாட்டுக்கு **ஏற்புப் பெறுகைக்கு** உரிமை கோர முடியும். ஆனால், உங்கள் வாழ்க்கைத் துணை தகுதியுடையவராய் இருப்பதோடு DV – 2 வழங்கப்பட்டு இருந்தாலன்றி, உங்களுக்கு DV - 1 வழங்கப்படமாட்டாது. அத்துடன், நீங்கள் இருவரும் ஒன்றாகவே பல்வகை வீசாக்களுடன் ஐக்கிய அமெரிக்காவினுள் பிரவேசித்தல் வேண்டும். இதே போல பராயமடையாத, தங்கிவாழ் பிள்ளை ஒன்றும் அதன் பெற்றார் பிறந்த நாட்டுக்கு ஏற்புப் பெற முடியும்.

இறுதியாக, இந்த வருடத்தின் DV நிகழ்ச்சித் திட்டத்திற் பங்குபற்றுவதற்குத் தகுதியில்லாத ஒரு நாட்டில் நீங்கள் பிறந்திருந்தால், உங்கள் பெற்றாரில் எவரேனும் ஒருவர் பிறந்த நாட்டுக்கு, நீங்கள் பிறந்த நேரத்தில் தகுதியற்ற நாட்டில் உங்கள் பெற்றாரில் எவராவது வசித்திருக்காத வரையில், நீங்கள் ஏற்புப் பெறுகை பெற முடியும். பொதுவாக மக்கள் பிறந்திருக்காவிட்டால், அல்லது சட்ட ரீதியாகப் பிரஜை ஆகாதிருந்தால், அவர்கள் அந்த நாட்டுக்கு விஜயஞ் செய்தால் அல்லது அந்த நாட்டிற் தற்காலிகமாகப் படித்தால் அல்லது அந்த நாட்டில் தொழில் பொருட்டு ஏதாவது கம்பனி அல்லது அரசாங்கத்தின் சார்பில் தங்கியிருந்தால் மட்டும், வதிவாளர்கள் எனக் கருதப்பட மாட்டார்கள். நீங்கள் மாற்று ஏற்புப் பெறுகையைக் கோரினால் நீங்கள் அத்தகைய தகவலை மின் - DV மின்னணுத் தொடர்புறாப் பிரவேசப் பதிவுப் படிவத்தில், கேள்வி # 6 இற் சுட்டிக் காட்டுதல் வேண்டும். பிழையான **தகுதியுடை** அல்லது **ஏற்புப் பெறுகை** நாட்டை நிரல்படுத்துதல் (செல்லுபடியான கோரிக்கையைத் தாபிக்க முடியாத நாட்டை) உங்கள் பிரவேசப் பதிவைத் தகைமை இழக்கச் செய்லாம் என்பதைக் கவனத்திற் கொள்ளுங்கள்.

**2. நான் பெற்றுக்கொண்ட, நான் தெரிவுசெய்யப்பட்டமை பற்றிய அறிவித்தல் அதிகாரபூர்வமானது என்பதை நான் எவ்வாறு அறிந்து கொள்வது? எழுந்தமான DV லொத்தரில் நான் தெரிவு செய்யப்பட்ட நிகழ்வை நான் எவ்வாறு உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்?**

**உங்களுடைய உறுதிப்படுத்தற்தாளை ஜுன் மாதம் 2013 வரை பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுங்கள்.** E-DV இணையதளம் **www.dvlottery.state.gov** பிரவேச தகுதி இறுதி முடிவு பதிவினூடாகத் உங்கள் பிரவேசப் பதிவின் நிலையைப் பார்ப்பதற்கு உறுதிப்படுத்தற்தாள் உங்களுக்கு அவசியப்படும். **பிரவேசத்தகுதி இறுதிமுடிவு பதிவின் மூலமாக மட்டுமே DV – 2013 சேர்வாளர்களுக்கு அவர்களின் தெரிவு அறிவிக்கப்படுவதோடு, நீங்கள் எவ்வாறு உங்கள் பதிவேட்டை மேற்கொண்டு செயல் படுத்தி உங்கள் குடிவரவு வீசாவுக்கான நேர்காணலுக்கான நேரம், காலம் முதலிய தகவல்களை அறிவிக்கும்.**

தெரிவு செய்யப்படும் தகவல்கள் மே 1, 2012 முதல் கிடைக்கக் கூடியதாகயிருக்கும். **உறுதிப்படுத்தற் தகவற் தாளை நீங்கள் இழந்தால் நீங்கள், உங்களது DV பிரவேசப் பதிவின் நிலையை, நீங்களாகவே பார்த்துக்கொள்ள முடியாமல் போய்விடும்.** எழுந்தமானமாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மட்டுமே மேற்கொண்டு DV வீசா விண்ணப்பங்களை எப்படி அனுப்புவது என்று தெரிவிக்கப்படும். தெரிவு செய்யப்படாதவர்கள் அவர்கள் தெரிவு செய்யப்படாததைப் பற்றிய தகவல்களை உறுதிப்படுத்தற் தகவற் தாளை வைத்து உத்தியோகபூர்வ DV இணையதளம் மூலமாக அறிந்துக் கொள்ள முடியும். அவர்களுக்கு மேற்கொண்டு எந்த தகவல்களும் கொடுக்கப்படுவதில்லை. நாங்கள் உறுதிப்படுத்தற்தாள் தகவல்களை உங்களுக்கு **வழங்குவதில்லை**. வீசா செயன்முறையைத் தொடர்வதற்கு, தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியலை ஐக்கிய அமெரிக்கத் தூதரகங்களோ, காவற்றூதர் நிலையங்களோ **வழங்குவதில்லை**.

எழுந்தமானமாகத் தெரிவு செய்யப்பட்ட சேர்வாளர்கள் DV வீசா விண்ணப்பத்திற்கான மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி மின் - DV இணையதளம் www.dvlottery.state.gov பிரவேசத்தகுதி இறுதிமுடிவு பதிவின் உறுதிப்படுத்தப்பட்ட தகவற் தாளில் கொடுக்கப்பட்டிருக்கும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பல்வகை, குடிவரவு வீசாக் கட்டணங்கள் அனைத்தையும் வீசாவுக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்திலோ, காவற்றூதரகத்திலோ நேரில் செலுத்த வேண்டுமென அறிவுறுத்துரைகள் கூறுகின்றன. காவற்றூதர் காசாளர் அல்லது காவற்றூதர் உத்தியோகத்தர், கொடுப்பனவுக்கான ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் பற்றுச்சீட்டை வீசா விண்ணப்பதாரருக்கு உடனடியாக வழங்குவார். பல்வகை வீசாவுக்கு விண்ணப்பிக்கும் தெரிவுசெய்யப்பட்ட சேர்வாளர்கள், DV கட்டணத்துக்கான பணத்தைத் தபாலூடாகவோ, வெஸ்டேர்ன் யூனியன் ஊடாகவோ பிற ஒப்படைப்புச் சேவைகளினூடாகவோ அனுப்பக்கூடாது. தெரிவுசெய்யப்பட்டு ஏற்கனவே ஐக்கிய அமெரிக்காவில் இருப்பவர்களுக்கு DV வீசா கட்டணங்களை US வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய வரைமுறைகளை தனிப்பட்ட அறிவுறுத்தல்கள் மூலம் அறிவிக்கப்படும்.

மின்-DV லொத்தர் பதிவுகள் இணையத்தில், உத்தியோகபூர்வ U.S அரசாங்க மின் – DV இணைய தளமான **www.dvlottery.state.gov** இல் தெரியப்படுத்தப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு தெரிவுக் கடிதங்களை அனுப்பி வைக்க போவதில்லை. ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு மின்னஞ்சல்களை ஒருபோதும் அனுப்பி வைத்ததில்லை. DV - 2013 நிகழ்ச்சித் திட்டத்தின் பொருட்டும் மின் அஞ்சலைப் பயன்படுத்தும் எந்தத் திட்டமும் இல்லை. தெரிவுசெய்யப்பட்டவர்கள் பிரவேசத்தகுதி இறுதிமுடிவு பதிவில் தொடர்பு கொண்ட பின்னர், மின் அஞ்சல் மூலமாக வீசா நேர்முகத்தெரிவு நியமனங்கள் போன்ற தகவல்களைப் பெறுவர். மின் அஞ்சல், தெரிவானவர்களை பிரவேசத்தகுதி இறுதிமுடிவு பதிவில் நேர்முகத்தெரிவு நியமன விபரங்களைக் கண்டறியும்படி அறிவுறுத்தியிருக்குமேயன்றி, நியமனத்திற்கான திகதி, நேரம் போன்ற விபரங்களைக் கூறியிருக்காது.

இராஜாங்கத் திணைக்களத்தின் காவற்றூதர் விவகாரப் பணியகம் 'அரசாங்க' (".gov") காட்டி அடங்கலாக இணைய தளங்கள் மட்டும் தான் உத்தியோகபூர்வ அரசாங்க இணைய தளங்களெனப் பொது மக்களுக்கு மதியுரை வழங்குகிறது. அரசாங்கம் சாராத பல பிற இணைய தளங்கள் (உதாரணமாக, "com" அல்லது ".org" அல்லது ".net" எனும் பின்னொட்டுக்களைப் பயன்படுத்தி), சட்டபூர்வ, பயனுள்ள குடிவரவு, வீசா தொடர்புற்ற தகவல்கள், சேவைகள் என்பவற்றை வழங்குகின்றன. அரசாங்கச் சார்பற்ற இணைய தளங்களின் உள்ளடக்கம் எப்படியிருப்பினும் இராஜாங்கத் திணைக்களம் இந்த பிற இணைய தளங்களில் காணப்படும் தகவல்களுக்கு அல்லது பொருள்களுக்கு ஏற்பிசைவளிப்பதோ, அவற்றை விதந்துரைப்பதோ, அவற்றுக்கு ஆதரவளிப்பதோ இல்லை.

சில இணைய தளங்கள், வாடிக்கையாளர்களையும் பொது மக்களையும், அவற்றை உத்தியோகபூர்வ இணைய தளங்களெனச் சிந்திக்க வைப்பதற்கு, அவர்களுக்குத் தப்புவழி காட்டுவதற்கு முயலக்கூடும். அவை உங்களைத் தமது அளிப்புக்களுக்குக் கவருவதற்கு உங்களுடன் மின் அஞ்சல் தொடர்பு ஏற்படுத்துவதற்கு முயலலாம். இந்த இணைய தளங்கள் குடிவரவு நடவடிக்கை முறைகள் பற்றிய தகவல்கள், படிவங்கள் வழங்கல் போன்ற சேவைகளுக்கும் உங்களைப் பணஞ்செலுத்துமாறு தேவைப்படுத்த எத்தனிக்கக் கூடும். அவற்றை, இராஜாங்கத் திணைக்கள வீசாச் சேவை வெளிநாட்டுத் தூதரக காவற்றூதர் பிரிவு இணைய தளங்களிலும் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் இந்த இணைய தளங்கள் உங்கள் பணத்தை மொத்தமாகப் பெற்றுக் கொள்ள முடியும். மேலும், இந்த இணைய தளங்கள் உங்கள் பணத்தை மொத்தமாக ஏப்பமிடும் முயற்சியில் அடிக்கடி பலவகைக் குடிவரவு விண்ணப்ப, வீசாக் கட்டணங்களாக, நீங்கள் பெறாத சேவைகளுக்குப் பணஞ்செலுத்துமாறு உங்களைத் தேவைப்படுத்தக் கூடும். இந்தப் போக்கிரிக் கூட்டங்களில் ஒன்றுக்கு நீங்கள் ஒரு முறை பணம் செலுத்தி விட்டாற் போதும். அவர்களை நீங்கள் மீண்டும் பார்க்கவே மாட்டீர்கள். அத்துடன், நீங்கள் உங்கள் சொந்தத் தகவல்களை இவ்வலை கடப்பிடங்களுக்கு அனுப்புவதிலும் மிக்க கவனமாக இருத்தல் வேண்டும். அவற்றை இந்த இணைய தளங்கள் மோசடி / களவு போன்றவற்றுக்கு அடையாளமாகப் பயன்படுத்தவும் கூடும்.

### 3. சில நாடுகளின் சுதேசிகள் பல்வகை நிகழ்ச்சித் திட்டத்துக்குத் தகைமை பெறாதிருப்பது ஏன்?

பல்வகை வீசாக்கள், ஐக்கிய அமெரிக்காவிற்கு பெரிய எண்ணிக்கையான குடிவரவாளர்களை அனுப்பும் நாடுகள் தவிர்ந்த பிற நாடுகளைச் சேர்ந்த ஆட்களுக்குக் குடிவருவதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் நோக்கத்தைக் கொண்டுள்ளன. 'உயர் நுழைவு' நாடுகளைச் சேர்ந்த சுதேசிகளுக்குப் பல்வகை வீசா எதுவும் வழங்கப்படலாகாது எனச் சட்டம் கூறுகிறது. இந்தச் சட்டம், கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவிற்குக் குடிவந்த குடும்ப ஆதரவு பெற்ற, தொழில்வாய்ப்பு அடிப்படையிலான வீசா வகுதிகளில் மொத்தத்தில் 50,000 பேர் குடிவந்த நாடு என வரையறை செய்கிறது. ஆண்டுதோறும் பல்வகை லொத்தருக்குத் தகுதியற்றவராகும் சுதேசிகளின் நாடுகளை இனங் காண்பதற்காக, USCIS குடும்ப, தொழில் வாய்ப்பு குடிவரவுப் பிரதேசத் தொகை இலக்கங்களைக் கூட்டுகிறது. ஒவ்வொரு வருடாந்த மின் - DV பிரவேசப் பதவிக் காலப்பகுதிக்கு முன்னர் புறம்பான தீர்மானம் எடுக்கப்படுவதனால் தகுதி பெறாத சுதேசிகள் வாழும் நாடுகளின் நிரல் ஒவ்வொரு வருடமும் மாற்றமடையலாம்.

### 4. DV-2013 இற்கான எண்ணிக்கை எல்லை என்ன?

ஐக்கிய அமெரிக்காவின் பல்வகைக் குடிவரவு நிகழ்ச்சித் திட்டமானது, ஒவ்வொரு வருடமும் தகுதியான ஆட்களுக்கு ஆகக் கூடியதாக 55,000 நிரந்தர வதிவு வீசாக்களை சட்ட ரீதியாக வழங்குகிறது. எனினும், 1997 நவம்பர் மாதத்தில் காங்கிரசினால் நிறைவேற்றப்பட்ட நிக்கரகுவா சீராக்கல், மத்திய அமெரிக்க நிவாரண சட்டம் (NACARA) தொடக்கத்தில், அதாவது DV - 1999 வாக்கில், தேவைப்படும் காலம் வரையில், ஆண்டுதோறும் வழங்கப்படும் 55,000 பல்வகை வீசாக்களில் 5000 வரையிலான வீசாக்களை NACARA நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயன்படுத்துவதற்கு ஒதுக்குமாறு விதந்துரைத்துள்ளது. 5000 பல்வகை வீசா வரையிலான உண்மையான எல்லைக் குறைப்பு DV–2000 உடன் ஆரம்பமாகியது. அது DV–2013 வரையில் செயல்வலுவில் இருக்கும் சாத்தியம் உள்ளது.

### 5. DV–2013 இற்கான பிராந்திய பல்வகை வீசா (DV) எல்லைகள் யாவை?

ஐக்கிய அமெரிக்க பிரஜாவுரிமை, குடிவரவுச் சேவையானது (USCIS) ஒவ்வொரு வருடத்துக்குமான DV பிராந்திய எல்லைகளைக் குடிவரவு, நாட்டுரிமைச் சட்டத்தின் (INA) பிரிவு 203 (c) இல் குறித்துரைக்கப்பட்டிருக்கும் வாய்ப்பாட்டுக்கு இணங்கத் தீர்மானிக்கிறது. USCIS கணிப்புகளைப் பூர்த்தி செய்ததும் பிராந்திய வீசா எல்லைகள் அறிவிக்கப்படுகின்றன.

**6. DV-2013 நிகழ்ச்சித் திட்டத்துக்கான பிரவேசப் பதிவுகள் எப்போது ஏற்றுக் கொள்ளப்படும்?**

DV – 2012 பிரவேசப் பதிவுக் காலப்பகுதி, மேலே பட்டியற்படுத்தப்பட்ட பதிவுக் காலப்பகுதி முழுவதும் அமையும். ஒவ்வொரு வருடமும் மில்லியன் கணக்கான மக்கள் பதிவுக் காலப்பகுதியின் போது நிகழ்ச்சித் திட்டத்துக்கு விண்ணப்பிக்கிறார்கள். பெருந்தொகையிலமைந்த பதிவுகள், வெற்றிகரமான ஆட்களைத் தெரிவு செய்து சீரிடுவதில் பெரும் வேலைப் பளுவை உருவாக்குகின்றன. பிரவேசப் பதிவுக் காலப்பகுதியை ஒக்டோபர். நவம்பர் மாதங்களில் வைத்துக்கொள்வது தெரிவு பெறுபவர்க்கான அறிவித்தல் உரிய நேரத்தில் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதுடன் வீசா விண்ணப்பதாரர்களுக்கும் நமது தூதரகங்கள், காவற் தூதரங்களுக்கும் வீசா வழங்கலுக்கான விடயங்களைத் தயாரித்துப் பூர்த்தி செய்வதற்குக் கால அவகாசம் வழங்குகிறது. பதிவுக் காலப்பகுதியின் முற்பகுதியில் பிரவேசப் பதிவை மேற்கொள்ளுமாறு உங்களுக்கு வலுவாக ஊக்கமளிக்கப்படுகிறது. பதிவின் இறுதிக் காலகட்டத்தில் மிக அதிக கேள்வி நிலவுவதால், அது முறைமையை மெதுவாக்கக்கூடும். 2011 நவம்பர் 5, சனிக்கிழமை மதியம் EST இற்குப் பின்னர் எந்தப் பிரவேசப் பதிவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**7. ஐக்கிய அமெரிக்காவில் இருப்பவர்கள் நிகழ்ச்சித் திட்டத்துக்கு விண்ணப்பிக்கலாமா?**

ஆம். விண்ணப்பதாரர் ஐக்கிய அமெரிக்காவில் இருக்கலாம் அல்லது இன்னொரு நாட்டில் இருக்கலாம். பிரவேசப் பதிவை ஐக்கிய அமெரிக்காவில் இருந்தவாறோ வேறு நாட்டில் இருந்தவாறோ சமர்ப்பிக்கலாம்.

**8. ஆண்டுதோறும் நடாத்தப்படும் மின் - DV பதிவுக் காலப்பகுதியில் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் ஒவ்வொரு பிரவேசப் பதிவுக்கு மட்டும் மட்டுப்படுத்தப் பட்டுள்ளாரா?**

ஆம். ஒவ்வொரு பதிவுக் காலப்பகுதியிலும் ஓர் ஆளினால் அல்லது ஓர் ஆளுக்காக ஒரு பிரவேசப் பதிவை மட்டும் சட்டம் அனுமதிக்கிறது. **ஒன்றுக்கு மேற்பட்ட பிரவேசப் பதிவைச் சமர்ப்பிக்கும் ஆட்கள் தகைமை நீக்கம் செய்யப்படுவர்.** இராஜாங்கத் திணைக்களம், பதிவுக் காலப்பகுதியின் போது பல பிரவேசப் பதிவுகளைச் சமர்ப்பிக்கும் ஆட்களை அடையாளங் காண்பதற்கு அதி நவீன தொழினுட்பவியல்களையும் வேறு மார்க்கங்களையும் பயன்படுத்தும். ஒன்றுக்கு மேற்பட்ட பிரவேசப் பதிவுகளைச் சமர்ப்பிக்கும் ஆட்கள் தகைமை நீக்கம் செய்யப்படுவதுடன் அது பற்றிய மின்னணுப் பதிவும் இராஜாங்கத் திணைக்களத்தில் நிரந்தரமாகப் பேணப்படும். தனி நபர்கள் ஒவ்வோர் ஆண்டும், ஒழுங்காக இடம்பெறும் பதிவுக் காலப்பகுதியில், நிகழ்ச்சித் திட்டத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

**9. கணவன், மனைவி ஒவ்வொருவரும் தனித்தனியாகப் பிரவேசப் பதிவைச் சமர்ப்பிக்கலாமா?**

ஆம். கணவன் மனைவி ஒவ்வொருவரும், தகுதித் தேவைப்பாடுகளை நிறைவு செய்தால், தனித்தனியே ஒரு பிரவேசப் பதிவைச் சமர்ப்பிக்கலாம். எவரேனும் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் மற்றவர் வழி அந்தஸ்துக்கு உரித்துடையவராவார்.

**10. எனது மின்-DV பிரவேசப் பதிவில் நான் குடும்ப உறுப்பினர்களில் யார் யாரைச் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும்?**

உங்களது பிரவேசப் பதிவில் நீங்கள் **உங்களின் வாழ்க்கைத் துணையையும்** (அதாவது உங்களின் கணவன் அல்லது மனைவி) உங்களின் 21 வயதுக்குக் குறைந்த திருமணமாகாத பிள்ளைகள் அனைவரையும், நிரல்படுத்துதல் வேண்டும். அத்துடன், நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையைச் சட்டமுறையில் பிரிந்திருந்தாலன்றி (அதாவது நீதிமன்றம் அங்கீகரித்த எழுத்திலுள்ள உடன்படிக்கை இருந்தாலன்றி அல்லது நீதிமன்றக் கட்டளை இருந்தாலன்றி) அவர்களிடமிருந்து நீங்கள் தற்போது பிரிந்து வாழ்ந்தாலும் கூட, நிரல்படுத்துதல் வேண்டும். நீங்கள் சட்ட ரீதியாகப் பிரிந்திருந்தால் அல்லது விவாகரத்துப் பெற்றிருந்தால், உங்களது முன்னைய வாழ்க்கைத் துணையை நிரல்படுத்த வேண்டிய தேவை இல்லை. நீங்கள் **21 வயதுக்குக் குறைந்த, திருமணமாகாத உங்களது பிள்ளைகள் அனைவரையும்** - அவர்கள் உங்களது இயற்கையான பிள்ளைகளாயினும் சரி, உங்களது வாழ்க்கைத் துணையின் பிள்ளைகளாயினும் சரி, அன்றேல் உங்களது நாட்டுச் சட்டத்துக்கு இணங்க நீங்கள் முறைப்படி தத்தெடுத்த பிள்ளைகளாயினும் சரி – அப்பிள்ளை ஏற்கெனவே ஐக்கிய அமெரிக்காவின் பிரஜையாக அல்லது சட்டமுறையில் நிரந்தர வாசியாக இருந்தாலன்றி, முதல் மின் DV பதிவில் நிரல்படுத்துதல் வேண்டும். 21 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் அனைவரையும் - **அவர்கள் தற்போது உங்களுடன் வாழாதிருந்தாலும் சரி நீங்கள் DV நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அவர்களுடன் குடிவருவதற்கு உத்தேசிக்காவிட்டாலும் சரி – மின்னணுப் பதிவில் நிரல்படுத்துதல் வேண்டும்.** ஐக்கிய அமெரிக்காவில் ஏற்கெனவே பிரஜாவுரிமை பெற்ற அல்லது சட்டமுறையில் நிரந்தர வதிவாளர்களாக உள்ள உங்களின் பிள்ளைகளை நிரல்படுத்தத் தேவையில்லை.

உங்கள் குடும்ப உறுப்பினர்களை நீங்கள் நிரல்படுத்தியுள்ள நிகழ்வு பின்னர் அவர்கள் உங்களுடன் பயணஞ்செய்ய வேண்டுமெனப் பொருள்படாது. அவர்கள் வராது இருக்கத் தீர்மானிக்கலாம். எனினும், தகுதியுள்ள சார்ந்து வாழ்பவர் ஒருவரை உங்களின் வீசா விண்ணப்பப் படிவத்தில் சேர்த்துக் கொண்டால், உங்களின் மூலப் பதிவில் அதைச் சேர்த்துக் கொள்ளத் தவறியிருக்கும் பட்சத்தில், உங்கள் பதிவு தகைமை நீக்கத்துக்கு உட்பட்டுவிடும். இது மூல விண்ணப்பம்

சமர்ப்பிக்கப்பட்ட நேரத்தில் குடும்ப உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு மட்டும் ஏற்புடையதாகும். அது பின்னைய தேதி ஒன்றில் பெற்றுக்கொண்டவர்களுக்கு ஏற்புடையதாகாது. உங்களது நிரலில் உங்களது வாழ்க்கைத் துணை தனியான பதிவை, இரண்டு பதிவுகளும் உங்களைச் சார்ந்திருப்போர் அனைவரும் பற்றிய விபரங்களை அடக்கியிருக்கும் வரையில், சமர்ப்பிக்கப்படலாம். மேலே குறிப்பிட்ட கேள்வி #9 ஐப் பார்க்க.

**11. நான் எனது ஒரின துணைவரை DV விண்ணப்பத்தில் இணைத்துக் கொள்ள முடியுமா?**

இல்லை. ஐக்கிய அமெரிக்காவின் குடிவரவு சட்டத்தில் ஒரின திருமணங்கள் அங்கீகரிக்கப்படவில்லை. எனினும், உங்கள் ஒரின துணைவர் DV நிகழ்ச்சித் திட்டத்திற்கு தனிப்பட்ட முறையில் விண்ணப்பிப்பம் செய்யலாம்.

**12. எனது சொந்தப் பிரவேசப் பதிவைத் நானே சமர்ப்பிக்க வேண்டுமா அன்றேல், எவரேனும் ஒருவர் எனது சார்பில் தொழிற்படலாமா?**

உங்கள் சொந்தப் பதிவுகளை நீங்களே தயாரித்துச் சமர்ப்பிக்கலாம். அல்லது வேறு எவராவது உங்களுக்காகப் பதிவைச் சமர்ப்பிக்கலாம். பிரவேசப் பதிவு, ஆளினால் நேரடியாக சமர்ப்பிக்கப்பட்டதா அல்லது அதற்கான உதவி சட்டத்தரணியால் அல்லது நண்பரால் அல்லது உறவினரால் வழங்கப்பட்டதா என்பது எப்படி இருப்பினும், ஓர் ஆளின் பேரில் ஒரு பதிவு மட்டும் சமர்ப்பிக்கப்பட முடியும். பதிவில் உள்ள தகவல்கள் சரியானவையாக, பூரணமானவையாக இருப்பதை உறுதிப்படுத்துவது சேர்வாளரின் பொறுப்பாகும். அனைத்து பிரவேசப் பதிவுவாளர்களும் தெரிவு செய்யப்படாதவர்கள் மின்-DV இணையதளம் www.dvlottery.state.gov பிரவேசத்தகுதி இறுதிமுடிவு பதிவு மூலமாக இல் 2012 மே 1 ஆம் திகதி முதல் சரி பார்த்துக்கொள்ளலாம். தமது பதிவின் நிலைமையைச் சுயேச்சையாகச் சரி பார்ப்பதற்கு, பதிவாளர்கள், தமது, உறுதிப்படுத்தற் தகவற் தாளை வைத்துக்கொள்ள வேண்டும்.

**13. கல்விக்கான அல்லது வேலை அனுபவத்துக்கான தேவைப்பாடுகள் யாவை?**

சேர்வாளர் ஒவ்வொருவரும் ஆகக் குறைந்தது உயர் பாடசாலைக் கல்வியை அல்லது அதற்குச் சமமான கல்வியை அல்லது இரண்டு வருடப் பயிற்சி அல்லது அனுபவம் தேவையான ஒரு தொழிலில் கடந்த ஐந்து வருடங்களுக்குள் இரண்டு வருட அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டுமெனச் சட்டமும் ஒழுங்கு விதிகளும் தேவைப்படுத்துகின்றன. 'உயர் பாடாசலைக் கல்வி அல்லது அதற்குச் சமமான கல்வி' என்பது, ஐக்கிய அமெரிக்காவில் 12 வருட ஆரம்ப, இடைநிலைக் கல்வியை அல்லது இன்னொரு நாட்டில் முறை சார்ந்த, ஐக்கிய அமெரிக்காவில் உயர் பாடசாலைக் கல்வியுடன் ஒப்பிடத்தக்க, ஆரம்ப இடைநிலைக் கல்வியென வரையறை செய்யப்பட்டுள்ளது. முறைசார் கல்வி நெறிகள் மட்டுமே இத்தேவையைப் பூர்த்தி செய்யும். அஞ்சல் முறை நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது அவற்றிற்குச் சமமான சான்றிதழ்கள் (G.E.D) போன்றவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கல்வி அல்லது வேலை அனுபவம் பற்றிய ஆவணச் சான்று, வீசா தொடர்புற்ற நேர்காணலின் போது காவற்றூதர் உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**14. பல்வகை வீசா நிகழ்ச்சித் திட்டத்துக்கு எந்தத் தொழில்கள் தகைமை அளிக்கின்றன?**

தொழில் திணைக்களத்தின் **O*Net Online** தரவுத்தளம் தொழில் அனுபவத்தை ஐந்து 'தொழில் வலயங்க'ளாகத் தொகுதிப்படுத்துகிறது. பல தொழில்கள் தொழில் திணைக்கள வெப் தளத்தில் நிரல்படுத்தப்பட்டிருக்கும் அதே வேளையில் ஒரு சில குறித்த தொழில்கள் மட்டும் பல்வகை வீசா நிகழ்ச்சித் திட்டத்துக்குத் தகைமை அளிக்கின்றன. உங்களின் வேலை அனுபவத்தின் அடிப்படையில் பல்வகை வீசாவுக்குத் தகுதி பெறுவதற்கு நீங்கள் கடந்த ஐந்து வருடங்களில் வேலை வலயம் 4 அல்லது 5 ஆகப் பெயர் சூட்டப்பட்ட தொழிலில் அல்லது **7.0 வீச்சில் அல்லது அதற்கு மேற்பட்ட வீச்சில் குறித்த தொழில் தயாரிப்பில் (SVP) வகைப்படுத்தப்பட்ட தொழில் ஒன்றில் 02 வருட** அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**15. தகைமை பெறுவதற்கான தொழில்களைத் தொழில் திணைக்கள வெப் தளத்தில் நான் எவ்வாறு கண்டு கொள்ளலாம்?**

தகைமை பெறும் DV தொழில்கள், தொழில் திணைக்களத்தின் **O*Net Online** தரவுத் தளத்தில் தரப்பட்டுள்ளன. உங்கள் தகைமை பெறல் தொழிலைக் கண்டுகொள்வதற்கு இப்படிகளைப் பின்பற்றுக: 'தொழில்களைக் காண்க' என்பதைத் தெரிவு செய்க. அதன் பின்னர் குறித்தவொரு 'தொழிற் குடும்ப'த்தைத் தெரிந்தெடுக்க. உதாரணமாக, கட்டடக் கலையும் எந்திரவியலும் என்பதைத் தெரிவு செய்து, 'செல்' என்பதை கிளிக் செய்க. பின்னர், குறித்த தொழிலுக்கான இணைப்பை அமுக்குக. இதே உதாரணத்தைப் பின்பற்றி வானூர்தி வெளி எந்திரிகள் என்பதைக் கிளிக் செய்க. குறித்த தொழில் இணைப்பைத் தெரிவு செய்த பின்னர், பெயர் சூட்டிய தொழில் வலய இலக்கத்தையும் குறித்த தொழில் தயாரிப்பு வீத

வீச்சையும் கண்டு கொள்வதற்கு “வேலை வலய” தத்தலை (SAP) தெரிவு செய்க. மேலதிக தகவல்களுக்கு Diversity Visa – List of Occupations webpage இணையதளத்திற்கு சென்று பார்க்கவும்

**16. வெற்றி பெறும் சேர்வாளர் எவ்வாறு தெரிவு செய்யப்படுவார்?**

ஒவ்வொரு வலயத்திலும் பெறப்பட்ட பிரவேசப் பதிவுகள் அனைத்தும் தனித்தனியாக இலக்கமிடப்படும். பதிவுக் காலப்பகுதி முடிவுற்ற பின்னர், கணினி ஒன்று, ஒவ்வொரு பூகோளப் பிராந்தியத்தின் பொருட்டும் பெறப்பட்ட பிரவேசப் பதிவுகள் அனைத்திலுமிருந்து பிரவேசப் பதிவுகளை எழுந்தமானமாகத் தெரிவு செய்யும். ஒவ்வொரு பூக்கோளப் பிராந்தியத்திலிருந்தும் எழுந்தமானமாகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிரவேசப் பதிவு, பதிவு பெறும் முதலாவது விடயமாக அமையும்; தெரிந்தெடுத்த இரண்டாம் பிரவேசப் பதிவு இரண்டாம் பதிவாக அமையும். இது போலவே மற்றையவையும். பதிவுக் காலப்பகுதியின் போது பெறப்பட்ட பிரவேசப் பதிவுகள் அனைத்தும் ஒவ்வொரு பிராந்தியத்தினுள்ளும் தெரிவு செய்யப்படுவதற்குச் சமமான சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்கும். பிரவேசப்பதிவு ஒன்று தெரிவுசெய்யப்படும்போது, சேர்வாளருக்கு அது 2012 மே 1 ஆம் திகதியில் இருந்து மின் - DV இணையதளம் www.dvlottery.state.gov இன் பிரவேசத்தகுதி இறுதிமுடிவு பதிவில் தெரிவிக்கப்படும். கென்டகி கொன்சூலர் மையம் (KCC), வீசா விண்ணப்பதாரராகத் தெரிவு செய்யப்பட்டவர் ஐக்கிய அமெரிக்கக் காவற்றூதர் அலுவலகத்தில் வீசா நேர்காணலுக்குத் தோற்றுமாறு அறிவுறுத்தும் வகையில், அல்லது ஐக்கிய அமெரிக்காவில் அந்தஸ்த்தை மாற்றுவதற்குத் தகைமை பெறுபவர்கள் உள்ளுர் USCIS அலுவலகத்துக்கு விண்ணப்பிக்கும் வரையில், அந்த விடயத்தைத் தொடர்ந்து முறை வழிப்படுத்திக் கொண்டிருக்கும்.

**முக்கிய குறிப்பு: எழுந்தமான லொத்தர் சீட்டிழுப்பில் தெரிவானவர்களுக்கான அறிவித்தல்கள், மின்-அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படமாட்டா. தெரிவுசெய்யப்பட்டவர்கள் பற்றிய சட்டபூர்வமான அறிவித்தல்கள் 2002 மே 1 ஆம் திகதியில் இருந்து மின் - DV இணையதளம் www.dvlottery.state.gov பிரவேசத் தகுதி இறுதி முடிவு பதிவில் அறிவிக்கப்படும். இனிமேலும் பிரவேசப் பதிவு ஒன்று தெரிவு செய்யப்படும்போது, அரச திணைக்களத்தினால் சேர்வாளருக்கு அறிவித்தற் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட மாட்டாது. உங்கள் மின்-DV தெரிவு பற்றிய அறிவித்தலை நீங்கள் மின் - அஞ்சல் மூலமாகவோ அல்லது தபால் மூலமாகவோ பெற்றுக் கொண்டால் அந்தச் செய்தி சட்டபூர்வமானதல்ல என்பதை அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் தெரிவு செய்யப்பட்டு, உத்தியோகப்பூர்வமான பிரவேசத் தகுதி இறுதிமுடிவு பதிவின் மூலம் அனுப்பப் பட்ட பின்னரே, உங்களைப் பற்றிய நடைமுறைகள் செயலமைக்கப்பட்டு, அதைத் தொடர்ந்து அரச திணைக்களத்தினால் மின்-அஞ்ஞல் தொடர்புகள் உங்களுக்கு ஏற்பட்டு மீண்டும் பிரவேசத் தகுதி இறுதி முடிவு பதிவில் தொடர்பு கொள்ள வலியுறுத்தும். தபால் மூலமாகவோ வெஸ்டர்ன் யூனியன் போன்ற சேவைகளிடமிருந்தோ உங்களிடம் பணம் அறவிடாது.**

**17. தெரிவு செய்யப்பெற்றவர்கள் தங்கள் நிலையை USCIS உடன் சீர்செய்து கொள்ளலாமா?**

ஆம். ஆயின், அவர்கள் INA இன் பிரிவு 245 இன் நியதிகளின் கீழ் நிலையை மாற்றுவதற்கு வேறு வழியில் தகுதி பெற்றிருத்தல் வேண்டும். ஐக்கிய அமெரிக்காவில் வசிக்கும் தெரிவுசெய்யப்பட்ட தனி நபர்கள் நிரந்தர வதிவாளர்களாக நிலையைச் சீர்செய்துகொள்வதற்கு USCIS இற்கு விண்ணப்பிக்கலாம். **USCIS ஆனது தங்கள் விடயத்தில், எவர்களேனும் வெளிநாடுகளில் இருக்கும் வழிநிலையினர்களின் முறைவழிப்படுத்தல் அடங்கலாக, நடவடிக்கையை 2013 செப்டெம்பர் 30 இற்கு முன்னர் பூர்த்தி செய்துகொள்வதை விண்ணப்பதாரர் உறுதிப்படுத்துதல் வேண்டும். 2013 செப்டெம்பர் 30 இல் தான் DV – 2013 இற்கான பதிவுத் திகதி காலாவதியாகிறது. 2012 செப்டெம்பர் 30 நள்ளிரவுக்குப் பின்னர் எந்தச் சூழ்நிலையிலாவது DV–2013 நிகழ்ச்சித் திட்டத்துக்கான வீசா இலக்கங்கள் எவையும் வழங்கப்படமாட்டா.**

**18. தெரிவு செய்யப்படாத சேர்வாளர்களுக்கு அறிவிக்கப்படுமா?**

தெரிவு செய்யப்படாதவர்கள் உட்பட, சகல சேர்வாளர்களும், E-DV வலை கடப்பு **www.dvlottery.state.gov** யினூடாகத் தமது பிரவேசப் பதிவின் நிலையைச் சரிபார்த்து, தமது பிரவேசப் பதிவு தெரிவாகியுள்ளதா, தெரிவாக இல்லையா என்பதை அறிந்துகொள்ளலாம். பிரவேசப் பதிவைச் செய்த நேரத்திலிருந்து தமது பிரவேசப் பதிவைத் தொடரறா நிலையில் சரிபார்க்கும் வரையில், விண்ணப்பதாரர்கள் தமது சொந்த உறுதிப்படுத்தற் தகவற் தாளை வைத்துக்கொள்ள வேண்டும். DV-2013 இற்கான நிலைமைத் தகவலை மே 1, 2012 முதல் ஜூன் 30, 2013 வரை, தொடரறா நிலையில் பெற்றுக்கொள்ளலாம். (DV லொத்தர், DV-2012 பிரவேசப்பதிவுகள் ஜூலை 1,2011 தொடக்கம் ஜூன் 30, 2012 வரை வலை கடப்பில் இருக்கும்).

**19. எத்தனை தனிப்பட்டவர்கள் தெரிவு செய்யப்படுவர்?**

DV–2013 இற்கு 50,000 DV வீசாக்கள் உள்ளன. தெரிவு செய்யப்பட்ட முதல் 50,000 ஆட்களில் சிலர் வீசாவுக்குத் தகைமை பெறும் சாத்தியம் இல்லாததனாலும் சிலர் வீசா வழங்கலுக்குத் தமது விடயத்தைத் தொடரமாட்டார்கள் ஆதலாலும் 50,000 இற்கு மேற்பட்டவர்களின் பதிவுகள், கிடைக்கப்பெறும் DV வீசாக்கள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக, CA/CST யினால் தெரிவு செய்யப்படும். எனினும், ஆரம்பத்தில் தெரிவு செய்யப்பட்ட அனைவருக்கும் வழங்குவதற்குப் போதிய எண்ணிக்கையில் வீசா இருக்காது எனவும் இது பொருள்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் யாவருக்கும் நிரலில் உள்ள அவர்களின் இடம் கால தாமதமின்றி மின் - DV பிரவேசத்தகுதி இறுதிமுடிவு வலைகடப்பினூடாக அறிவிக்கப்படும். DV - 2013 நிகழ்ச்சித் திட்டத்துக்கான நேர்காணல்கள் 2012 ஒக்டோபரில் ஆரம்பமாகும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வெளிநாடுகளில் உள்ள ஐக்கிய அமெரிக்கக் காவற்றூதர் நிலைய உத்தியோகத்தர்களுடனான அட்டவணைப்படுத்திய நேர்காணல்களுக்கு நான்கு முதல் ஆறு வாரங்களுக்கு முன்னர், மின் - DV பிரவேசத்தகுதி இறுதிமுடிவு பதிவு வலைகடப்பினூடாக அனுப்பி வைக்கும். ஒவ்வொரு மாதமும், வழங்கப்படும் வீசா அனுமதிக்கும் பட்சடத்தில், அந்த மாதத்தில் வீசா வழங்கலுக்குத் தயாராக உள்ள விண்ணப்பதாரர்களுக்கு வீசா வழங்கப்படும். 50,000 வீசாக்களும் வழங்கப்பட்டு முடிந்ததும் அவ்வாண்டுக்குரிய நிகழ்ச்சித் திட்டம் முடிவடையும். கோட்பாட்டளவில், வீசா எண்ணிக்கைகள், 2012 செப்டெம்பர் மாதத்துக்கு முன்னர் முடிவடைந்து விடக்கூடும். வீசா பெற விரும்பும் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் தமது விடயத்தில் உடனடியாகத் தொழிற்படத் தயாராக இருத்தல் வேண்டும். **எழுந்தமானத் தெரிவில் தெரிவு செய்யப்பட்டவர்கள், வீசா பெறுபவர் என்பதை உத்தரவாதப்படுத்த முடியாது. எழுந்தமானத் தெரிவு என்பது, நீங்கள் பல்வகைக் குடிவரவு வீசாவுக்கு விண்ணப்பிக்கும் தகுதியைக் பெற்றுள்ளீர்கள் என்பதையும், தகுதிப் பெற்றால் உங்களுக்கு வீசா வழங்கப்படும் என்பதையும் விளக்கும். வீசா விண்ணப்பதாரர்களில் தெரிவு செய்யப்பட்ட முதல் 50,000 பேருக்கே வீசா வழங்கப்படும்.**

**20. மின்-DV நிகழ்ச்சித் திட்டத்துக்கு விண்ணப்பதாரர் விண்ணப்பிப்பதற்கு ஆகக் குறைந்த வயது என்றொரு வயது உண்டா?**

இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்கு விண்ணப்பிப்பதற்கு ஆகக் குறைந்த வயது என்று ஒன்று இல்லை. ஆனால், ஒவ்வொரு பிரதான விண்ணப்பதாரருக்கும் விண்ணப்பிக்கும் நேரத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள உயர் பாடசாலைக் கல்வி அல்லது வேலை அனுபவம், 18 வயதுக்குக் குறைந்த ஆட்களில் அநேகமானவர்களைத் தகைமை நீக்கம் செய்துவிடும். பெற்றவர்களோ, உடன் பிறப்புகளோ முக்கிய விண்ணபதாரருடன் இணைந்து நிரல் படுத்த முடியாது.

**21. மின் - DV நிகழ்ச்சித் திட்டத்துக்குக் கட்டணம் எவையேனும் உண்டா?**

**மின்னனு லொத்தர் பதிவுக்கு விண்ணப்பிப்பதற்குக் கட்டணம் எதுவும் இல்லை.** DV விண்ணப்பதாரர்கள் தேவையான வீசா கட்டணங்கள் அனைத்தையும் வீசாவுக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் தூதரகத்தில் அல்லது காவற்றூதரகத்தில் காவற்றூதர் காசாளரிடம் நேராக செலுத்துதல் வேண்டும். தேவையான பல்வகை வீசா, குடிவரவு வீசா விண்ணப்பக் கட்டணங்கள் பற்றிய விபரங்கள், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு, அனுப்பிவைக்கப்படும் அறிவுறுத்துரைகளில் அடக்கப்பட்டிருக்கும்.

**22. DV விண்ணப்பதாரர்கள் வீசா தகுதியின்மையின் எவையேனும் காரணங்களின் தளர்த்தீடுகளைப் பெறுவார்களா அல்லது தளர்த்தீட்டு விண்ணப்பத்துக்கு விசேட செயன்முறைப்படுத்தல் பெறுவார்களா?**

குடிவரவு, நாட்டுரிமைச் சட்டத்தின் (INA) குறித்துரைக்கப்பட்டிருக்கும் குடிவரவு வீசாக்களுக்குத் தகுதியின்மையின் அனைத்துக் காரணங்களுக்கும் விண்ணப்பதாரர்கள் உட்படுவார்கள். தகுதியின்மையின் ஏதாவது காரணத்தின் தளர்த்தீட்டுக்கு, சட்டத்தில் சாதாரணமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவை தவிர, விசேட ஏற்பாடுகளோ தளர்த்தீட்டு வேண்டுகோள்களுக்கான விசேட முறைமைப்படுத்தல்களோ இல்லை. அமெரிக்கப் பிரஜைகளோ, சட்டரீதியான நிரந்தர விதிவாளர்களோ, விண்ணப்பதாரரின் நெருங்கிய உறவினர்களாக இருந்தால், சில பொதுவான தளர்த்தீடுகள் DV விண்ணப்பதாரர்களுக்கு இருக்கலாம். ஆனால், இந்நிகழ்ச்சித் திட்டத்திலுள்ள நேரமட்டுப்பாடுகள், இத்தகைய ஏற்பாடுகள் மூலம் விண்ணப்பதாரர்கள் நன்மையடைவதைக் கடினமாக்கிவிடும்.

**23. குடிவரவு வீசாவுக்கு இன்னொரு வகுதியில் ஏற்கெனவே பதிவு செய்தவர்கள் DV நிகழ்ச்சித் திட்டத்துக்கு விண்ணப்பிக்கலாமா?**

ஆம். அத்தகைய ஆட்கள் DV நிகழ்ச்சித் திட்டத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

**24. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் DV வகுதி வீசாக்களுக்கு விண்ணப்பிப்பதற்கு எவ்வளவு காலம் உரித்துடையவர்களாக இருப்பார்கள்?**

DV – 2013 லொத்தரில் தெரிவு செய்யப்படுபவர்கள், 2012 ஒக்டோபர் 1 முதல் 2013 செப்டெம்பர் 30 வரையிலான, 2012 இன் நிதி ஆண்டில் நிகழும் வீசா வழங்குகைக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவர்களாவர். **விண்ணப்பதாரர்கள் நிதி ஆண்டின் இறுதி வாக்கில் DV வீசாவை அல்லது சீர்செய்த அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.** தெரிவு செய்யப்பட்டு, ஆனால் செப்டெம்பர் 30, 2013 (நிதி ஆண்டின் இறுதியில்) வீசாக்களை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு DV நலன்களை அடுத்த வருடத்துக்குக் கொண்டு செல்வதற்கு வழி எதுவும் இல்லை. மேலும், DV - 2013 பதிவு வழியில் வழியந்தஸ்தைப் பெறும் வாழ்க்கைத் துணைகளும் பிள்ளைகளும் DV வகுதியில் 2012 ஒக்டோபருக்கும் 2013 செப்டெம்பருக்கும் இடையில் மட்டும் தான் வீசாக்களைப் பெற்றுக்கொள்ள முடியும். வெளிநாடுகளிலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு அட்டவணைப்படுத்திய நியமனத்துக்கு நான்கு முதல் ஆறு வாரங்களுக்கு முன்னர் இணையதளம் பிரவேசத்தகுதி இறுதிமுடிவு பதிவில் அறிவிக்கப்படும்.

**25. மின் - DV நிகழ்ச்சித் திட்டத்தில் தெரிவு செய்யப்படுபவர் இறந்தால், DV விடயத்துக்கு என்ன நிகழும்?**

லொத்தரில் தெரிவான நபர் ஒருவரின் மரணம், DV விடயம் தானாகவே தள்ளுபடி செய்யப்படும் விளைவை ஏற்படுத்தும். தகுதியுள்ள வாழ்க்கைத் துணையோ பிள்ளைகளோ இருசாராரும் அந்த பிரவேசப் பதிவுக்கான DV வீசாவுக்கு மேலும் உரித்துடையவர்கள் அல்லர்.

**26. மின் - DV தொடரறா நிலை எப்போது கிடைக்கக்கூடியதாக இருக்கும்?**

தொடர்பறா பிரவேசப் பதிவு, செவ்வாய் கிழமை 2011 ஒக்டோபர் 4 EDT (GMT – 4) பகல் மதியத்தில் ஆரம்பமாகி, சனிக்கிழமை 2011 நவம்பர் 5 EST (GMT – 5) பகல் மதியத்தில் முடிவடையும் வரையான பதிவுக் காலப்பகுதியில் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

**27. நான், நுண் மென் சொல் நிகழ்ச்சித் திட்டத்துக்கு (அல்லது பிற பொருத்தமான நிகழ்ச்சித் திட்டத்துக்கு) மின் - DV பிரவேசப் படிவத்தை இறக்கி, சேமித்து, அதன் பின்னர் அதை நிரப்ப முடியுமா?**

இல்லை. நீங்கள் படிவத்தை இன்னொரு நிகழ்ச்சித் திட்டமாகச் சேமித்து, பின்னர் பூர்த்தி செய்து, சமர்ப்பிக்க முடியாது. மின் - DV பிரவேசப் படிவம் ஒரு வெப் படிவம் மட்டுமே. அதனால், இது ஒரு உரிமையுடைய சொல் முறைவழியாக்கி உருவமைவிலும் பாா்க்கக் கூடுதலாக 'முழுதளாவிய' ஒன்றாகும். மேலும், இது, தகவல்கள் தொடரா நிலையில் இருக்கையில் பூர்த்தி செய்யப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்தப் படுகின்றது.

**28. வருடி ஒன்றுக்கு எனக்கு அணுகல் இல்லையாயின், நான், ஐக்கிய அமெரிக்காவில் உள்ள எனது உறவினர்க்கு ஒளிப்படங்களை அனுப்பி, அவற்றை வருடிவித்து, சிறு வட்டிற் சேமித்து, அதன் பின்னர் அச்சிறுவட்டை நான் விண்ணப்பிப்பதன் பொருட்டு எனக்குத் திருப்பி அனுப்பி வைப்பித்துப் பெற முடியுமா?**

ஆம். இதனை, ஒளிப்படம் அறிவுறுத்துரைகளில் உள்ள ஒளிப்படத் தேவைப்பாடுகளை நிறைவு செய்வதோடு ஒளிப்படம் மின் - DV தொடர்பறாப் பிரவேசப் பதிவு சமர்ப்பிக்கப்பட்ட அதே நேரத்தில் மின்னணு முறையிற் சமர்ப்பித்தாற் செய்ய முடியும். விண்ணப்பதாரர் பிரவேசப் பதிவைத் தொடர்பறா நிலையிற் சமர்ப்பித்த போது வருடிய ஒளிப்படக் கோப்பை ஏற்கெனவே வைத்திருத்தல் வேண்டும். ஒளிப்படத்தைத் தொடர்பறா விண்ணப்பத்திலிருந்து புறம்பாகச் சமர்ப்பிக்க முடியாது. ஒரு தொடர்பறாப் பிரவேசப் பதிவை மட்டும் ஒருவரால் அல்லது ஒருவருக்காகச் சமர்ப்பிக்க முடியும். பல் பதிவுகளைச் சமர்ப்பிப்பது, DV 2013 இற்கு, அந்த ஆளுக்கான பதிவைத் தகைமை நீக்கம் செய்துவிடும். பிரவேசப் பதிவு முழுவதும் (ஒளிப்படமும் விண்ணப்பமும் ஒருங்காக) ஐக்கிய அமெரிக்காவில் இருந்தோ வெளிநாடுகளிலிருந்தோ மின்னணு முறையிற் சமர்ப்பிக்கப்பட முடியும்.

**29. நான் படிவத்தின் ஒரு பகுதியை நிரப்பி விட்டுப் பின்னர் வந்து மற்றையப் பகுதியைப் பூர்த்தி செய்வதற்குப் படிவத்தைச் சேமித்து வைக்க முடியுமா?**

இல்லை. அவ்வாறு செய்ய முடியாது. மின் - DV பிரவேசப் படிவம் ஒரு தடவையிற் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனினும், படிவம் இரண்டு பகுதிகளில் அமைந்திருப்பதனாலும் பின்னலமைப்பு இடைமறிப்புகள், தாமதங்கள் சாத்தியமாக இருப்பதனாலும் மின் - முறைமையானது படிவத்தின் இறக்கத்துக்கும் தொடரறா நிலையில் சமர்ப்பித்த பின்னர் பதிவு மின் - DV வெப் தளத்தில் பெறப்படும் நேரத்துக்கு இடையிலும் அறுபது (60)

நிமிடங்களை அனுமதிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அறுபது நிமிடத்துக்கு மேல் கடந்து, பதிவு, மின்னணு முறையில் பெறப்பட்டிருக்காவிடின் ஏற்கெனவே பெற்ற தகவல்கள் ஒதுக்கப்பட்டு விடும். முழுமையான பிரவேசப் பதிவு ஒன்று முன்னையப் பகுதிப் பதிவின் இணைப்படியாக எதிர்பாராத விதத்திற் கொள்ளப்படும் சாத்தியம் இல்லாதிருப்பதன் நோக்கிலேயே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. DV – 2013 அறிவுறுத்துரைகள் படிவத்தை நிரப்புவதற்கு எந்தெந்தத் தகவல்கள் தேவை என்பதைத் தெளிவாகவும் முழுமையாகவும் விளக்கியுள்ளன. தொடர்புறா நிலையில் படிவத்தைப் பூர்த்தி செய்யத் தொடங்குவதன் முன்னர், தேவையான தகவல்கள் அனைத்தும் பெறப்பட்டிருப்பதை உறுதி செய்து, நீங்கள் முழுமையாகத் தயாராக இருக்க வேண்டும்.

**30. சமர்ப்பிக்கப்பட்ட இலக்கப் படிமங்கள் விவரக் குறிப்புக்களுக்கு இணங்காமல் இருந்தால், முறைமை தானாகவே மின் - DV பிரவேசப் படிவத்தை நிராகரித்து, அதனை அனுப்பியவருக்கு அறிவிக்குமென நடைமுறைகள் கூறுகின்றன. எனது பிரவேசப் பதிவை நான் மீளச் சமர்ப்பிக்க வேண்டுமென இது பொருள்படுகிறதா?**

ஆம். பிரவேசப் பதிவை மீளச் சமர்ப்பிக்க முடியும். பதிவு, தன்னியக்க முறையில் நிராகரிக்கப்பட்டமையால், அது, மின் - DV இணைய தளத்தில் உண்மையாகச் சமர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படவில்லை. அது சமர்ப்பித்த மின் - DV பதிவாகக் கணிக்கப்படவில்லை. அத்துடன், அதனைப் பெற்றுக் கொண்டமைக்கான உறுதிப்படுத்தல் அறிவிப்பு எதுவும் அனுப்பப் பட்டிருக்கவில்லை. அனுப்பப்பட்ட இலக்க ஒளிப்படம் தேவைப்பாடுகளுக்கு அமைவுற்று இருக்காத காரணத்தினால், அதில் பிரச்சினைகள் எவையேனும் இருந்திருப்பினும் அது மின் - DV இணைய தளத்தினால் சுயமாகவே நிராகரிக்கப்படும். எனினும், நிராகரிப்புச் செய்தி, அனுப்பியவரை வந்தடைவதற்கு எடுக்கும் நேரம், பின்னலமைப்பின் இயல்பு காரணமாக எதிர்வு கூற இயலாத ஒன்றாக உள்ளது. விண்ணப்பதாரரினால் நிலைநிறுத்தப்பட முடியுமானால் படிவம் பகுதி ஒன்று அல்லது இரண்டு அறுபது (60) நிமிடங்களுள் மீண்டும் அனுப்பப்பட்டால், பிரச்சினை எதுவும் இருக்காது. இல்லையெனில், சமர்ப்பிப்புச் செயன்முறை மீண்டும் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர், பூரணமான விண்ணப்பம் ஒன்று பெறப்பட்டு உறுதிப்படுத்தல் அறிவித்தல் கிடைக்கப்பெறும் வரையில் எத்தனை தடவையும், விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க முயற்சி செய்ய முடியும்.

**31. பூர்த்தி செய்த மின் - DV பிரவேசப்படிவம் தொடர்பாக முறைமையினூடாகப்பெறப்பட்டுள்ளதென்ற மின்னணு உறுதிப்படுத்தல் அறிவிப்பு, சமர்பிப்பு நிகழ்ந்த உடனே அனுப்பிவைக்கப்படுமா?**

ஏற்கத்தக்க மின்-DV பிரவேசப் படிவத்தின் பெறுகையின் உறுதிப்படுத்தலைக் கொண்ட, மின் - DV இணைய தளத்திலிருந்து பெறப்படும் பிரதிபலிப்பு மின் - DV இணைய தளத்தினால் உடனடியாக அனுப்பி வைக்கப்படும். எனினும், அது அனுப்பியவரைச் சென்றடைவதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும் என்பது இணையத்தின் தன்மை காரணமாக எதிர்வு கூற முடியாத ஒன்றாக உள்ளது. எனினும், 'சமர்ப்பிப்பு' பொத்தானை அழுத்திய பின்னர் பல நிமிடங்கள் கடந்து விட்டால், இரண்டாவது தடவையாக 'சமர்ப்பிப்பு' பொத்தானை அழுத்துவதில் தவறேதும் இல்லை. 'சமர்ப்பிப்பு' பொத்தான் இரண்டாவது தடவையாக அழுத்தப்படும் நிலையினால் மின் - DV முறைமை குழப்பமடைந்து விடாது. அதற்கான காரணம் உறுதிப்படுத்தல் பிரதிபலிப்புப் பெறப்படாமையேயாகும். விண்ணப்பதாரர் ஒருவர் பூரணமான விண்ணப்பம் பெறப்பட்டு உறுதிப்படுத்தல் அறிவித்தல் அனுப்பப்படும் வரையில் எத்தனை தடவைகள் தேவைப்பட்டாலும் முயன்று அனுப்பி வைக்கலாம். எனினும், உறுதிப்படுத்தல் அறிவிப்புக் கிடைத்ததும் உங்கள் தகவல்களை மீண்டும் சமர்ப்பிக்க வேண்டாம்.

**32. இணைய மோசடியை அல்லது கோரப்படாத மின் அஞ்சலை நான் எவ்வாறு அறிவிக்க முடியும்?**

இணைய மோசடி பற்றிய முறைப்பாடு ஒன்றைச் செய்ய நீங்கள் விரும்பினால், சமஷ்டி வணிக ஆணைக்குழுவினால், 17 தேசங்களைச் சேர்ந்த நுகர்வோர் பாதுகாப்பு முகாமைகளின் ஒரு கூட்டு முயற்சியோடு ஓம்பப்படும் **http://www.econsumer.gov/english/** வலை கடப்பிடத்தைப் பார்க்க. அல்லது சமஷ்டி புலனாய்வுப் பணியத்துக்கு (FBI), இணையக் குற்ற முறைப்பாட்டு நிலையத்துக்குச் செல்லுங்கள். கோரப்படாத மின்னஞ்சல் பற்றி முறைப்பாடு செய்வதற்கு நீதித் திணைக்களத்தின், ஐக்கிய அமெரிக்கப் பக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**33. பல்வகை வீசா நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம், ஒரு வீசாவை நான் பெற்றால், ஐக்கிய அமெரிக்காவிற்குச் செல்வதற்கான விமானக் கட்டணம் தொடர்பாக ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் எனக்கு உதவுமா? வீடொன்றை இடவமைப்புச் செய்வதற்கும் தொழில் தொடர்பாகவும் எனக்கு உதவுமா? உடனலப் பராமரிப்பை வழங்குமா? நான் முழுமையாக என்னை நிலை நிறுத்திக்கொள்ளும் வரையும் ஏதாவது உதவிப் பணத்தை வழங்குமா?**

இல்லை. பல்வகை வீசாவைப் பெறும் விண்ணப்பதாரர்களுக்கு விமானக் கட்டணம், வீடு தொடர்பான உதவி, அல்லது உதவிப் பணம் போன்ற எவ்வித உதவியும் வழங்கப்படமாட்டாது. பல்வகை வீசாவிற்கு விண்ணப்பிப்பதற்கு நீங்கள்

தெரிவுசெய்யப்பட்டால், வீசா உங்களுக்கு வழங்கப்படுவதற்கு முன், ஐக்கிய அமெரிக்காவில் பொதுச் சுமையாக இருக்க மாட்டீர்கள் என்பதற்குச் சான்று வழங்க வேண்டும். உங்களுடைய சொந்தச் சொத்துக்களின் தொகுதியாகவோ, ஐக்கிய அமெரிக்காவில் வாழும் ஓர் உறவினர் அல்லது நண்பரிடமிருந்து, ஆதரவு சத்திய ஓலையாகவோ (படிவம் 1-134), அத்துடன்/ அல்லது, ஐக்கிய அமெரிக்காவிலுள்ள தொழில் வழங்குநர் ஒருவர் அனுப்பிய தொழில் வாய்ப்பாகவோ இச்சான்று அமையலாம்.

## DV-2013 இற்குத் தகுதியாகவுள்ள சுதேசிகளின் பிராந்திய வாரியான நாடுகளின் நிரல்

கீழே தரப்பட்டிருக்கும் நிரல், இப்பல்வகை நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஒவ்வொரு பூகோளப் பிராந்தியத்தினுள்ளும் DV - 2013 இற்குத் தகுதியாக இருக்கும் சுதேசிகளின் நாடுகளைக் குறிக்கிறது. ஒவ்வொரு பிராந்தியத்தினுள்ளும் இருக்கும் நாடுகளைத் தீர்மானித்தல், இராஜாங்கத் திணைக்களத்தின் பூகோளவியலர் வழங்கும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும். DV-2013 நிகழ்ச்சித் திட்டத்துக்குத் தகுதி பெறாத சுதேசிகள் வாழும் நாடுகள், குடிவரவு, நாட்டுரிமை சட்டத்தின் பிரிவு 203(c) இல் உள்ள வாய்ப்பாட்டுக்கு இணங்க, U.S பிரஜாவுரிமை, குடிவரவுச் சேவையினால் (USCIS) இனங்காணப்பட்டுள்ளன. வெளிநாட்டுச் சார்புப் பிரதேசங்கள் ஆளும் நாட்டின் பிராந்தியத்தினுள் அடக்கப்பட்டுள்ளன. இந்தப் பல்வகை நிகழ்ச்சித் திட்டத்துக்குத் தகுதி இல்லாத சுதேசிகளின் நாடுகள் (அவை குடும்ப – ஆதரவு பெற்ற, தொழில்வாய்ப்பு – அடிப்படையிலான குடிவரவு அல்லது ‘உயர் சேர்வு’ நாடுகளாக இருப்பதன் காரணமாக) அந்தந்தப் பிராந்திய நிரல்களுக்குப் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ளன.

### <u>ஆபிரிக்கா</u>

அல்ஜீரியா

அங்கோலா

பெனின்

பொற்சுவானா

பேர்க்கினா பசோ

புருண்டி

கமெறூன்

கேப் வேடே

மத்திய ஆபிரிக்கக் குடியரசு

சாட்

கொமொறொஸ்

கொங்கோ

கொங்கோ சனநாயகக் குடியரசு

கோதே டி ஐவோர் (ஐவரி கோஸ்ட்)

ட்ஜிபௌத்தி

எகிப்து

ஈகுவட்டோரியல் கினி

எரித்திரியா

மடகஸ்கர்

மாலாவி

மாலி

மொரித்தானியா

மொறிஷஸ்

மொறோக்கோ

மொசாம்பிக்

நமீபியா

நைகர்

நைஜீரியா

ருவண்டா

சாவோ தோமே அன்ட் பிறின்சிபே

செனகல்

ஸேஷெல்ஸ்

சியேரா லியோன்

சோமாலியா

தென் ஆபிரிக்கா

சூடான்

| | |
|---|---|
| எத்தியோப்பியா | சுவாஸிலாந்து |
| கபொன் | தன்சேனியா |
| த கானா | டோகோ |
| கம்பியா | டியூனிசியா |
| கினி | உகண்டா |
| கினி-பிசௌ | சம்பியா |
| கென்யா | சிம்பாப்வே |
| லெசோத்தோ | சூடான் |
| லைபீரியா | சுவேசிலாந்து |
| லிப்யா | டன்சேனியா |
| | உகண்டா |
| | சம்பியா |
| | சிம்பாப்வே |

காஸா ஸ்ட்றிப்பில் பிறந்தவர்கள், எகிப்திற்கு ஏற்றுகை பெறலாம்.

## DV-2011 இற்குத் தகுதியாகவுள்ள சுதேசிகளின் பிராந்திய வாரியான நாடுகளின் நிரல்

### ஆசியா

| | |
|---|---|
| அப்கானிஸ்தான் | லெபனொன் |
| பஹ்ரேயின் | மலேசியா |
| பூட்டான் | மாலை தீவுகள் |
| புரூனெய் | மொங்கோலியா |
| பர்மா | நேபாளம் |
| கம்போடியா | வட கொரியா |
| கிழக்கு டிமோர் | ஓமான் |
| ஹொங்கொங் விசேட நிருவாகப் பிராந்தியம் | கட்டார் |
| இந்தோனேசியா | சவுதி அரேபியா |
| ஈரான் | சிங்கப்பூர் |
| ஈராக் | இலங்கை |
| இஸ்ரேல் | சிரியா |

ஜப்பான்

ஜோடான்

குவெய்ற்

லாவோஸ்

தாய்வான்

தாய்லாந்து

ஐக்கிய அரபு எமிறேற்கள்

யேமன்

பின்வரும் ஆசிய நாடுகளின் சுதேசிகள் இந்த வருடத்தின் பல்வகை நிகழ்ச்சித் திட்டத்துக்குத் தகுதியுடையவர்கள் இல்லை: பங்களாதேஸ், சீனா (பெரு நிலத்தில் பிறந்தவர்கள்), இந்தியா, பாகிஸ்தான், தென் கொரியா, பிலிப்பைன்ஸ், வியட்னாம். ஹொங்கொங் விசேட நிர்வாகப் பிராந்தியம், மெகவ் விசேட நிர்வாகப் பிராந்தியமும் (SAR) தாய்வான் ஆகியவை தகைமை பெறுவதோடு அவை மேலே நிரற்படுத்தப்பட்டுள்ளன.

1967 ஜுன் மாதத்திற்கு முன்னர் இஸ்ரேல், ஜோர்தான், மற்றும் சிறியா போன்ற நாடுகளில் பிறந்தவர்கள் இஸ்ரேல், ஜோர்தான், மற்றும் சிறியா நாடுகளின் கீழ் தகைமை பெறுகிறனர்.

1967 ஆம் ஆணடு, ஜுன் மாதத்திற்கு முன்னர், இஸ்ரேல், ஜோடான், சிரியா என்பவற்றினால் நிர்வகிக்கப்பட்ட பிரதேசங்களில் பிறந்தவர்கள், முறையே, இஸ்ரேல், ஜோடான், சிரியா என்பவற்றிற்கு ஏற்றுகை பெறலாம்.

## DV-2011 இற்குத் தகுதியாகவுள்ள சுதேசிகளின் பிராந்திய வாரியான நாடுகளின் நிரல்

### ஐரோப்பா

அல்பேனியா

அன்டோரா

ஆர்மேனியா

அவுஸ்திரியா

அசெபர்ஜான்

பெலாரஸ்

பெல்ஜியம்

பொஸ்னியாவும் ஹேசெகொவீனாவும்

பல்கேரியா

சைப்பிரஸ்

செக் குடியரசு

டென்மார்க் (கூறுகளும் வெளிநாட்டுச் சார்ப்புப் பிரதேசங்களும் அடங்கலாக)

எஸ்தோனியா

பின்லாந்து

லித்துவேனியா

லக்செம்பேக்

மக்கவ் விசேட நிருவாகப் பிராந்தியம்

மசிடோனியா

மோல்டா

மோல்டோவா

மொனக்கோ

மொன்தெனிகுரோ

நெதர்லாந்து (கூறுகளும் வெளிநாட்டுச் குரேசியா பிரதேசங்களும் அடங்கலாக)

வட அயர்லாந்து

நோர்வே

போலந்து

போர்த்துக்கல் (கூறுகளும் வெளிநாட்டுச் சார்ப்புப் பிரதேசங்களும் அடங்கலாக)

ரொமேனியா

ரஷ்யா

| | |
|---|---|
| பிரான்ஸ் (கூறுகளும் வெளிநாட்டுப் பிரதேசங்களும் அடங்கலாக) | சன் மரீனோ |
| | சேர்பியா |
| ஜோர்ஜியா | சுலொவேக்கியா |
| ஜேர்மனி | சொல்வீனியா |
| கிறீஸ் | ஸ்பெயின் |
| ஹங்கேரி | சுவீடன் |
| ஐஸ்லாந்து | சுவிட்சர்லாந்து |
| அயர்லாந்து | தஜிகிஸ்தான் |
| இத்தாலி | துருக்கி |
| கசகஸ்தான் | துருக்கிமெனிஸ்தான் |
| கொசோவோ | உக்கிரேயின் |
| கிர்கிஸ்தான் | உஸ்பெக்கிஸ்தான் |
| லத்வியா | வத்திக்கன் நகரம் |
| லீச்டெரன்ஸ்டயின் | |

பின்வரும் ஐரோப்பிய நாடுகளின் சுதேசிகள் இந்த ஆண்டின் பல்வகை நிகழ்ச்சித் திட்டத்துக்குத் தகுதியுடையவர்கள் அல்லர்: பெரிய பிரித்தானியா (ஐக்கிய இராச்சியம்), போலந்து, ரஷ்யா. பெரிய பிரித்தானியா (ஐக்கிய இராச்சியம்) பின்வரும் சார்புப் பிரதேசங்களையும் அடக்குகிறது: அங்குவில்லா, பேர்முடா, பிரித்தானிய வேர்ஜின் தீவுகள், கைமன் தீவுகள், போக்லந்துத் தீவுகள், ஜிப்றோல்டர், மொன்ஸ்திரியற், பிற்கயன், சென்ற் ஹெலேனா, டேக்ஸ், கைகொஸ் தீவுகள். பல்வகை நிகழ்ச்சித் திட்ட நோக்கங்களுக்கு மட்டும் வட அயர்லாந்து தனியாகக் கையாளப்படுகின்றது; வட அயர்லாந்து தகைமை பெற்றுள்ளது. அது, தகைமை பெறும் பிரதேசங்களில் நிரற்படுத்தப்பட்டுள்ளது.

## DV-2013 இற்குத் தகுதியாகவுள்ள சுதேசிகளின் பிராந்திய வாரியான நாடுகளின் நிரல்

### <u>வட அமெரிக்கா</u>

பஹாமஸ்

வட அமெரிக்காவில் கனடா, மெக்சிக்கோ நாடுகளின் சுதேசிகள் இவ்வருடப் பல்வகை நிகழ்ச்சித் திட்டத்துக்குத் தகைமை பெற்றவர்கள் **அல்லர்**.

#### <u>ஓஷானியா</u>

| | |
|---|---|
| அவுஸ்திரேலியா (கூறுகளும் வெளிநாட்டுச் சார்புப் பிரதேசங்களும் அடங்கலாக) | பலாவு |
| | பப்புவா நியூ கினி |
| பிஜி | சொலமன் தீவுகள் |
| கிரிபத்தி | தொங்கா |

மார்ஷல் தீவுகள்

மைக்ரோனீசியா, சமஷ்டி அரசுக்கள்

நயுரு

நியூசிலாந்து (கூறுகளும் வெளிநாட்டுச் சார்புப் பிரதேசங்களும் அடங்கலாக)

துவாலு

வனுவத்து

சமோவா

**<u>தென் அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, கரிபியன்</u>**

அன்டிகுவா மற்றும் பாபுடா

ஆர்ஜென்டீனா

பாபடோஸ்

பெலிஸே

பொலீவியா

சிலி

கொஸ்டா றிக்கா

கியூபா

டொமினிக்கா

கிரெனடா

ஹொன்டுராஸ்

நிக்கரகுவா

பனாமா

பரகுவே

சென்ற் கிற்ஸ் மற்றும் நெவிஸ்

சென்ற் லூசியா

சென்ற் வின்சென்ற் மற்றும் கிரேனடின்ஸ்

சூரினாம்

ட்ரினிடாட் மற்றும் டுபாகோ

உருகுவே

வெனிசுவெலா

இந்த வருடத்தின் பல்வகை நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் **தகுதி பெறாத** சுதேசிகளின் இப்பிராந்திய நாடுகள் வருமாறு: பிரேசில், கொலம்பியா, டொமினிக்கன் குடியரசு, எல் சல்வடோர், குவாத்தமாலா, ஹைத்தி, ஜமெய்க்கா, மெக்சிக்கோ, மற்றும் பெரு.